சிறுகதை மாதஇதழ்

# மஞ்சரி

35

ஆனி 2023 பிரதம ஆசிரியர்: மு.தயாளன்

இம்மாத சிறுகதை மஞ்சரியை
நளாயினியின் 10 கதைகள்
அலங்கரிக்கின்றன.



வளர்ந்த, வளரும் படைப்பாளிகளுக்கான களம்

£4.00 / 150Rs/50Rs(india)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்சுமி பிரசுராலயம்

Luxmi Publication


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4



மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
300Rs £4


மு.தயாளன்
400Rs £4


மு.தயாளன்
400Rs £4


சு. ஆர்த்திகா
500Rs £4


அலெக்ஸ் பரந்தாமன்
400Rs £4

India 400 Rs
London £4
Can/Ame $10
Europe 10 Euro

**இலங்கையில் உள்ளவர்கள்**
Commercial bank Account No: 8370042817
**மற்றைய நாடுகளில் உள்ளவர்கள்** உங்கள் விருப்பத்தை luxmi2128@gmail.com இற்கு அனுப்பினால் payment link அனுப்பி வைக்கப்படும்

*எனது எல்லாப்புத்தகங்களும் சிறுகதை மஞ்சரிகளும்*
**Amazon Kindle** இல் உள்ளன.
**www.amazon.co.uk/ebooks** இல்
**Type M.Thayalan**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பயணம்....

ஒரு புதிய முயற்சி. கவிதையில் இப்படிச் செய்திருக்கிறார்கள். ஒருவருடைய கவிதையையே முழுமையாக சஞ்சிகையில் போட்டிருக்கிறார்கள். நானறிந்த வரை சிறுகதையில் நடந்ததாக இல்லை.

இம்முறை நாங்கள் அறிவித்தபடி சோ. நளாயினி அவர்களின் பத்துக் கதைகளை தாங்கி வருகிறது ஆனி மாதத்திற்கான சிறுகதை மஞ்சரி.

நளாயினி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மஞ்சரியின் ஆரம்ப காலங்களில் சில சிறுகதைகளை மஞ்சரியில் எழுதியிருக்கிறார். அவற்றில் அவரின் ஒரு சிறுகதை பரிசும் பெற்றிருக்கிறது.

மனிதர்களின் உணர்வுகளை எழுத்தில் வடிப்பது இலகுவான ஒன்றல்ல. நளாயினி பத்துக் கதைகளிலும் பத்துவிதமான பிரச்சினைகளை வெளிக் கொணர்ந்திருக்கிறார்.

எழுத்து நடை வாசகரைச் சுண்டியிழுக்கும் தன்மையானது. ஒருவிதத்தில் இதுவுமொரு சிறுகதைத் தொகுப்பே.

சிறுகதைகள் தற்காலத்தில் பலரால் எழுதப்படுகின்றன.

நாம் அருந்தும் தண்ணீர் அது எந்தப் பாத்திரத்தில் புகுகின்றதோ அதன் வடிவத்தைத் தன் வடிவமாகக் கொள்வதுபோல் சிறுகதையும் ஒவ்வொரு எழுத்தாளர்களாலும் புதிய வடிவத்தை எடுக்கின்றது. எழுத்தாளரின் சொல் வளத்தையும் அனுபவத்தையும் கொண்டு வடிவம் மாறுபாடடைகின்றது.

நளாயினி ஒவ்வொரு கதையிலும் அந்தக் கதை நிகழும் களத்தை அப்படியே எம் முன் கொண்டு வருவதை நீங்கள் படிக்கும் போது அனுபவிப்பீர்கள். மீண்டும் 40 ஆவது இதழை இப்படிக் கொண்டுவர எண்ணியுள்ளோம்.

மு. தயாளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதன்மை ஆசிரியர்** மு. தயாளன்
**உதவி ஆசிரியர்கள்**
வி.மைக்கல் கொலின். செல்வி த. சரண்யா,
திருமதி சாரு தயாளன்
**ஒப்பு நோக்காளர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு தயாளன்
**ஆலோசகர்கள்**
Dr P.இராசையா, பேராசிரியர் செ.யோகராசா

**தொடர்பு முகவரி:**
**Sirukathai manjari, 14 Brands Road, Berkshire SL3 8QP,UK** sirukathai1@gmail.com, +447505455811
**Sirukathaimanjari 91, Barathi street, Trincomalee, Srilanka**
sirukathai1@gmail.com, +94765554649

# உள்ளடக்கம்

| | |
|---|---|
| அன்பு | 04 |
| எழிலக்கா | 09 |
| ஒரு கையோசை | 13 |
| பகல் நிலவு | 20 |
| பால் ரீ | 27 |
| தேவாங்கு | 35 |
| அவள் ஒரு தொடர்கதை | 40 |
| ஒரு பகல் ஓர் இரவு | 49 |
| மரணத்தின் வாழ்வு | 56 |
| பெண்ணியவாதி | 60 |

**நன்றிக்குரியவர்கள்:**
திருமதி ஆர்த்தி துவாரகன் , திருமதி சாரு நற்குணதயாளன், திரு ரமணன் நற்குணதயாளன் ,செல்வி சரண்யா தனபாலசிங்கம், திரு வி. மைக்கல் கொலின், செ. யோகராசா, வணசிங்க அச்சகத்தினர்

**அட்டை வடிவமைப்பு:**
ரமணன் நற்குணதயாளன்

**ஓவியர்கள்:**
G. கைலாசநாதன் , T. சௌந்தர்

**சந்தா விபரம்:**
**Srilanka:1000Rs/Year**
Mrs Sasikala Thanabalasingam, Commercial bank, Trinco branch, 8370042817
**England** £20/Year **Den/Swiss/Ger:** 80Euro/year Can/USA/Amer: $120
Bank details: M. Natkunathayalan, Barclays, Sort code 20-37-15, A/C Number 60389307
IBAN : GB11BUKB20371560389307
SWIFTBIC BUKBGB22

**சிறுகதை மஞ்சரி 34**
**இன் சிறந்த இரு சிறுகதைகள்**
1. தடுப்புச் சுவர் - ஹம்சன் ராஜேந்திரன்
2. நண்பேன்டா - ஷெல்லிதாசன்

**அன்பான வேண்டுகோள்.**
*படைப்புகளுடன் உங்கள் வங்கி விபரம் அனுப்ப மறக்க வேண்டாம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நளாயினியின் இதய ஓசை...

நாம் அன்றாடம் காணும் மாந்தர்களின் நிலை, அவர்கள் சுமந்தலையும் வாழ்தலை எழுத்தின் மூலம் கொண்டு வரும் அவா எனக்குள் இருந்தாலும், முதன் முதலில் அதற்கான களத்தை என் தொழில் வடிவில் எனக்கு அமைத்துத் தந்தது மல்லிகைப் பந்தல் பதிப்பகமும் அதன் ஆசிரியருமான திரு டொமினிக் ஜீவா அவர்களும்தான். மாதாந்தம் சம்பளம் வாங்கும் ஒரு தட்டச்சாளராக மல்லிகைப் பந்தலுக்குள் நுழைந்த என்னை, தனது மல்லிகை 43வது ஆண்டு மலரில் மல்லிகையின் மொட்டு என அறிமுகப்படுத்தி நான் எழுதிய **தொடரும் காத்திருப்பு** எனும் சிறுகதை மூலம் தமிழ் எழுத்து உலகிற்குள் என்னைக் கொண்டு வந்தார். பல சிறந்த தமிழ் எழுத்தாளர்களின் அறிமுகமும் அங்கேதான் நான் கிடைக்கப் பெற்றிருந்தேன்.

அதன் பின்பு கொடகே நிறுவனத்தில் இணைந்த சந்தர்ப்பத்தில் சிங்கள மற்றும் ஆங்கில எழுத்தாளர்களுடனான பரிச்சயமும் அவர்களுடன் பழகி, அவர்களது எழுத்தை புரிந்து கொள்ளும் சந்தர்ப்பத்தையும் வழங்கியிருந்தது.

எந்த ஒரு பரிசில்களையும் எழுத்துக்கென பெற்றிருக்காத நான் சிறுகதை மஞ்சரி மூலமே சிறந்த சிறுகதைக்கான இரண்டாம் பரிசைப் பெற்றிருந்தேன். அதுவே என் எழுத்துக்கான உந்து சக்தியைத் தந்தது. தொடர்ந்தும் சிறுகதை மஞ்சரியினூடே என்னுடைய பத்து கதைகள் ஒரு மாத இதழில் வெளிவருவதற்கான வாய்ப்பையும் பெற்றிருக்கிறேன். என்னையும் என் எழுத்தையும் ஊக்குவிக்கும் சிறுகதை மஞ்சரி ஆசிரியர் மு.தயாளன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள் என்றும் உண்டு.

அதேபோன்று எப்போதுமே என்னைக் கண்காணித்து ஊக்குவிக்கும் திக்குவல்லை கமால் அங்கிள், மற்றும் திரு. வடிவழகையன் போன்றோர்க்கும் என் நன்றிகள் உரித்துடையன.

**- சோ. நளாயினி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# அன்பு

அவன் அழுது வடிந்த முகத்துடன்தான் எந்நாளும் வருவான். ஆனால் இன்று ஏனோ அவன் அதிகமாக அழுதிருக்கிறான் என்பதை வீங்கிய முகத்திலிருந்து அனுமானித்துக் கொண்டேன்.

அவன் படிக்கும் முன்பள்ளியில் நானொரு ஆசிரியை என்பதையும் மீறி என்னிடம் நெருக்கம் கொள்ளும் சிறுவர்கள் அதிகமென்றாலும், அவன் மட்டும் என்னை ஏனோ வேற்றுமையாய்ப் பார்ப்பதாகவே தோன்றும். தன் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க வந்த விரோதியாகவே அவன் மனதில் நான் பதிந்து போயிருப்பதை எண்ணி எனக்கு வேதனை நிரம்பியிருந்தது.

யாருடனும் அதிகம் பேசாத, ஏதோ சிந்தனை வயப்பட்டிருக்கும் அவனது சுபாவம் அவனைப் பற்றிய ஏதோவொன்றை எனக்கு மறைமுகமாக உணர்த்துவதாகவிருந்தாலும், சிறு குழந்தை அவன். இப்போதுதான் வெளியுலகின் தொடர்புக்குள் தன்னை இணைக்க முயன்று கொண்டிருக்கிறான். அவனிடம் எதைப் பற்றிக் கேட்பது? நான் கேட்க நினைப்பதற்கான பதிலை அளிக்கும் திறன் அவனிடமில்லை என்பதையும் நான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிவேன். ஆனாலும் அவன் எதிலும் ஒட்டாநிலையிலும், விலகிப் போகும் தருணங்களில் என் அருகாமையையும் அவனுக்கு அளிப்பதற்கே நான் முனைந்து கொண்டிருந்தேன்.

"நீ அங்கிட்டு போயிரு. எங்கிட்ட இருக்காத" அவனைத் தான் சிறுமி ஒருத்தி விரட்டிக் கொண்டிருந்தாள். அதீதமான அலங்காரத்துடன் வரும் ஓர் பெண் மணியின் மகள் அவள். அச்சிறுமி கூட தன் அன்னையைப் போலான பெருமிதப் போக்குடன் நடந்து கொள்பவள்தான். கண்டிக்க முனைந்த என்னை, அவள் அன்னையால் முன்பள்ளித் தலைமையிடம் முறைப்பாடு செய்யப்பட்டு, என் னைக் குற்றவாளியாக்கியவர் என்பது இன்றுபோலுள்ளது.

"என்ன சத்தம்?" கொஞ்சம் குரலை உயர்த்தியபடி அவர்களை நோட்டமிட்டேன், சிறுவர்களது சத்தம் அடங்கிப் போயிருந்தது. எனினும் அலங்காரத்துடன் வரும் அன்னையின் மகளிடம் மட்டும் சிறு முகச்சுழிப்புத் தெரிந்தது. கடந்துவிடலாமென நினைத்தாலும், அவள் விரட்டியபோது அவனின் ஒதுங்கல் முள்ளாய்க் கண்ணை உறுத்த, "பிரணதி ஏன் அவரை தள்ளிப் போகச் சொல்லுறீங்கள்? அவரை அந்தக் கதிரையில இருக்க விடுங்கோ" என் குரலில் கொஞ்சம் அதட்டல் கூடியிருந்தது.

"அம்மா சொல்லிச்சு இவங்க எல்லாம் தோட்டத்து முடுக்கில இருக்கிறவங்க, அதனால அவங்க கூட எல்லாம் சேர வேண்டாமென்னு" மழலை குரலோ முகமோ மாறாத அச்சிறு குழந்தையின் மனதில் விதைக்கப்பட்ட நஞ்சின் வீரியம் ஒரு நாகத்தின் விசத்தை ஒத்திருந்தது.

இப்போது என் கால்கள் அவர்களிருவருக்கருகிலும் நகர்கிறது.எனக்கும் அவர்களுக்குமிடையிலான உயரத்தைக் குறைப்பதற்கு முட்டி போட்டமர்ந்தவாறே இருவரையும் பார்க்கிறேன். அவனோ குனிந்த தலை நிமிராது நிற்பது ஆச்சரியத்தை அளித்தாலும், சிறுமியிடம் திரும்பி "இப்படிப் பேசக் கூடாது பிரணதி. அவன் நல்ல பெடியன் அவனோட சண்ட பிடிக்காமல் இருக்கவேணும். நீங்களெல்லாம் சின்னப் பிள்ளையள் எல்லாரும் ஒற்றுமையாக இருக்கவேணுமெண்டு எத்தினை நாள் நான் உங்களுக்குச் சொல்லித் தந்திருக்கிறன்." நான் சொன்ன அறிவுரையை வேண்டாதொன்றாகவே கேட்டுக் கொண்டிருப்பதை அவள் அங்க அசைவுகள் பிரதிபலித்திருந்தன. திரும்பி அவனைப் பார்த்தேன், இறுகிய பசை போலான அவன் நிலை, அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்ற பழமொழி கூடப் பொய்த்துவிடுமோவெனத் தோன்ற, நான் முயற்சியைத் தவறவிடுபவளில்லை என்பதை எனக்குள் நானே உருப்போட்டுக் கொண்டேன். "அன்பு" மிக மென்மையுடன் அவன் பெயரை உச்சரித்தபடி நோக்குகிறேன். என்னவென்று பிரித்தறிய முடியா வெற்றுப் பார்வையொன்றையே பதிலாகத் தந்தான்.

அடுத்தவர்களின் ஏளனப் பார்வைக்குட்படும் தோற்றம் கொண்டவனல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன். எண்ணெய் வைத்து படிய வாரிய தலைமுடி அவன் அப்பாவியான முகத்திற்கு அப்படியே பொருந்தினாலும், ஒட்டிய கன்னத்தில் சிறுபிள்ளை யென்றதற்கான எந்த மினுமினுப்புமற்று உலர்ந்து போயிருந்தான். ‘இவன் யார் சாயலில் இருப்பான்?’ அவன் அம்மாவோ அப்பாவோ போலிருப்பானோ? என் சிந்தனை அவனை மொய்த்தது. அந்த முன்பள்ளியில் சேர்ந்த நாளிலிருந்து நான் அவன் பெற்றோரென எவரையும் கண்டதில்லை. யாரோ ஓர் வயதான ஆச்சியே அவனைக் கொண்டு வந்துவிட்டுக் கூட்டிப் போவதை அவதானித்திருக்கிறேன். அவருடன் மட்டுமே அவன் கொஞ்சமேனும் ஆறுதலாகக் கதைப்பான்.

“அன்பு இந்தக்கதிரையில இரும்” என்மேசைக்கு முன்னாலுள்ள கதிரையொன்றில் அவனை அமர வைக்க, கூச்சத்தோடு அங்குமிங்கும் நெளிந்தவண்ணம் மற்றைய பிள்ளைகளைப் பார்க்கிறான் அவன். கூச்ச சுபாவமும் அவனோடு ஒட்டிக் கொண்டுள்ளது. பாடசாலையின் எந்த நிகழ்விலுமே அவன் பங்குபெற விரும்பியதில்லை. ஏதாவதோர் நிகழ்ச்சியில் அவனை இணைக்க முயலும் தருணங்களில் அவனோடு வரும் ஆச்சி ஏதேதோ காரணங்கள் சொல்லி அவனை நிகழ்வுகளில் சேர்த்துக் கொள்ளவிடாது செய்வதால் என் கோபம் ஆச்சியின் மீதே திரும்பும். அவர் எங்கள் விளக்கம் எதைப் பற்றியும் பெரிதாக அலட்டிக் கொள்வதாகவில்லை. பள்ளிக்கு நேரத்திற்குக் கூட்டிவந்து கூட்டிப் போவதே தன் கடமையென்றிருந்தார். “என்ன மிஸ் பண்ணுறது? இவன்ட அம்மாக்காரி இவேன் பொறந்து ரண்டு வயசிலேயே வெளிநாட்டுக்குப் போயிட்டா.... அவன் அப்பன்காரன் அவ அனுப்புற காசில குடிச்சிட்டு கெடக்கிறான்.... கூட்டிட்டு வாற ஆச்சி அன்புவின்ரை தாயிட அம்மாதான்... அவங்களும் வயசானவங்க... தன்னால முடிஞ்சத அவனுக்குச் செஞ்சு கொடுக்காங்க”

அவனோடு கூட வரும் விக்னேசின் தாய்தான் இதைச் சொன்னாள். “எனக்கு அன்புவின்ர வீட்டக் காட்ட முடியுமா?” நான் கேட்க விக்னேசின் அம்மா தயக்கம் காட்டினாலும், என் பிடிவாதத்தைப் பார்த்துப் பின் சம்மதித்தாள்.

கொழும்பு நகரின் இன்னொரு முகம் யாருக்கும் தெரியாமல் மறைந்து போயிருக்கிறதா, அல்லது மறைக்கப்பட்டிருக்கிறதா என்ற கேள்வி அவன் வீட்டின் நிலையைக் காண நேர்ந்த தருணத்தில் என்னிடம் மிதமிஞ்சி வெளிப் பட்டது.

வெளிச்சோடனைகளால் மறைக்கப்பட்டிருக்கும் கொழும்பு மாநகரின் ஏழ்மை நிலையறியாத ஏனைய பிரதேசத்தவர்களின் அதீத கற்பனைகள் கண் முன் நிழலாட, நான் பிரமிப்பாய் பார்த்து வியந்த நகரின் பிம்பம் கொஞ்சம் கொஞ்சமாய் சிதறத் தொடங்குகிறது.

சிறு ஒழுங்கைகள், இருபக்கமும் தொடர் வீடுகளாலான பகுதிகளைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டமென அம்மக்கள் அழைக்கிறார்கள். இந்தத் தோட்டங்களுக்குள்ளேயே இன்னும் சிறிய குச்சொழுங்கைகள் பல. அக்குச்சொழுங்கைகளை வெளியில் வசிப்போர் முடுக்கு, என விழித்து, அங்கு வாழும் மக்களிடமிருந்து தம்மை வேறுபடுத்த முனைகிறார்கள். அவர்களது பழக்க வழக்கங்களோடு தம்மை ஒப்பீடு செய்து தாம் உயர்ந்தோரென்னும் எண்ணத்தையும் வளர்க்க முற்படுகிறார்கள். முடுக்குகளிடையே ஒரு சிறு அறை போன்றளவிலான வீடுகளில் நான்கைந்து உறுப்பினரைக் கொண்ட கிட்டத்தட்ட ஓர் குடும்பம் வசிக்கிறது. பொதுக் குளியலறை மற்றும் மலசல கூடங்களே அவர்களது நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அவர்களுக்கென தனியான கழிப்பறைகள் எதுவுமில்லை. வீடுகளுக்கு நடுப்பகுதியாலோ, அருகாலோ வடிகான்கள் செல்வதால் சிலநேரங்களில் அவை நிரம்பி நாற்றம் வீசும். இந்த இடங்களில் வசிக்கும் குடும்பங்களில் பெரும்பாலான ஆண்கள் அதிகாலையிலேயே மீன்கடைகளுக்குச் செல்வதும், பெண்கள் வீட்டு வேலைகளுக்குச் செல்வதுமான அவர்களது அன்றாட வாழ்தல் பற்றிய நிறைவைக் கண்டுவிட, ஒருசிலரே இந்தத் துன்பியல் வாழ்விலிருந்து மீள முயற்சிக்கிறார்கள். அப்படித்தான் அன்புவின் குடும்ப நிலையும். வாழ்வாதாரத்தை ஈட்டிக் கொள்வதற்கென அவன் தாய் பணிப்பெண்ணாக மத்தியகிழக்கு நாடொன்றுக்குப் பயணப்பட, சிறுகுழந்தையான அவன் தனிமைக்குள் தள்ளப்பட்டு, யாருடைய அரவணைப்புமின்றிய அவன், தன் குழந்தைப் பருவத்தைத் தொலைத்துக் கொண்டிருப்பது எத்துணை ரணம்?

அன்று நான் சென்றதை எதிர்பார்த்திராத அன்பு வழிந்திருந்த மூக்குச் சளியைக் புறங்கையால் துடைத்தபடி, ஆச்சியின் பின் ஒழிந்து கொண்டு என்னை விழியகலப் பார்த்திருந்தான்.

அவனோர் கடினம் நிறைந்த உலகில் வாழ்வதாக நான் ஆதங்கப்பட்டுக் கொள்ளத் தொடங்கினேன்.. அக்கடினத்தன்மையை நீக்கிப் பெயருக்கேற்றாற் போல மென்மையுள்ளவனாக அவனை மாற்றிவிடத் துடித்த என் முயற்சிகள் அத்தனையும் தோல்வியில் முடிவதையிட்டு மனம் அயர்ச்சியுற்றாலும், அவன் வலியறிந்து அதைப் போக்கிட வேண்டுமென்பதில் மனம் உந்தவே செய்தது.

விளையாட்டு நேரம் பிள்ளைகள் எல்லோரும் விளையாடுவதில் கவனமாக, அவன் மட்டும் மைதானத்தில் கிளைபரப்பி நின்றிருந்த தேக்கு மரத்தினடியிலிருக்கும் கற்தூணில் அமர்ந்தவாறு விளையாடும் பிள்ளைகளை வேடிக்கைப் பார்த்தவனாயிருந்தான். மெல்ல அவனருகில் போயமர்ந்து சுருங்கி வரண்டு போன அவன் கரத்தை என் கைகளுக்குள் பொத்தியபடி, "அன்பு என்ன சாப்பிட்டியா? இண்டைக்கு நீ அழுதாயா?" ஆதரவாக அவனிடம் கேட்டேன்.

"ம்... சாப்புட்டேன் மிஸ்" என்றவாறு நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இ....ன்னை...க்கு. இல்ல... நேத்து.... ராவு... அழுதேன்..." ரணமான வார்த்தைகளாய் வந்து விழுந்த அவன் பதிலுக்கூடே இரண்டு சொட்டுக் கண்ணீரும் அவன் கரத்தைப் பொத்தியிருந்த என் கைகளில் விழுந்து தெறிந்தது. வேறு கேள்விகள் எதுவும் என்னிடம் மிஞ்சியிருக்கவில்லை.

அந்தச் சொட்டுக் கண்ணீர்த் துளியில் இந்த உலகம் மூழ்கிப் போயிருக்கலாம். அப்படி நிகழ்ந்திருக்குமாயின் இந்த ரணங்கள் கூட அடிபட்டோ, அமிழ்ந்தோ போய்விடலாமெனத் தோன்றியது. அடர்த்தி நிரம்பிய அக் கண்ணீர்த்துளிகள் அவனுக்குக் கனமானவையே, அந்தப் பிஞ்சுவிழிகள் தாங்கவொண்ணாப் பாரத்தையல்லவா சுமந்திருக்கின்றன. அப்படியான பாரத்தை அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருப்பவர்களை என்ன செய்தால் தகும்?

மெல்ல அவன் தலையை நீவுகிறேன்.... தாய்ப் பறவையின் இறகுச் சூட்டில் ஒதுங்க விளையும் செட்டை முளைக்கா சிறுகுஞ்சென என்னோடு ஒண்டிக் கொள்கிறான் அவன்.

*********

"டீச்சர்....!" பள்ளி முடிந்து வீடு செல்வதற்காக பேருந்து நிலையத்தில் நின்றிருந்த என் சேலைத் தொங்கலைப் பிடித்திழுத்த சிறுவனைப் பார்க்கிறேன். அண்ணாந்து பார்த்து வெண்ணிறப் பற்கள் தெரிய வாய் மலர்ந்து சிரிக்கிறான்.

"அன்பு" ஆச்சரியத்தோடு அவனைப் பார்க்கிறேன்.

அடையாளம் தெரியாதளவுக்கு அவன் தோற்றம் மாறிவிடவில்லை யென்றாலும், அவன் இறுகிய தன்மை இளகிப் பூவாய் மலர்ந்து சிரிப்பதைக் காண மனம் மகிழ்ச்சியில் பொங்குகியது. இப்போது அன்பு மிக மிக இலகுவாய் பேசிச் சிரிக்கத் தெரிந்து கொண்டிருக்கிறான்.

அவனருகிலேயே என்னைவிட ஓர் நான்கைந்து வயது மூத்தவளாயிருக்குமென மதிக்கத்தக்க பெண்மணி.

"டீச்சர் இது ஏங்கம்மா.... இப்போ ஏங்கூடவேதா இருக்காங்க. நான் ஒண்ணாம்பு படிக்கேன் டீச்சர் பெரிய இஸ்கூல்ல..."

அவன் கன்னத்தைத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, தாயைக் கூர்ந்து பார்க்கிறேன், அவன் சாயலிலேயே இருக்கிறாள். இல்லையில்லை அன்பு, அவன் அன்னை சாயலில் இருக்கிறான்.

**இக் கதை திரு ஜீ. ஜீ. எஸ் ஆனந்த அவர்களால் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.**

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழிலக்கா..

எழிலக்கா நல்ல வடிவு... பெயருக்கேற்ற மாதிரியே வடிவு நிறைஞ்சவா... எங்கட வீட்டுக்குப் பக்கத்திலயிருக்கும் அவட அக்காவின்ர வீட்டுக்கு வந்திருக்கிறா, கர்ப்பிணியா இருக்கும் அவான்ர அக்காவைப் பார்த்துக் கொள்ள....

அவ வந்ததிலயிருந்து ஊரில உள்ள பெடியளெல்லாம் அவட வீட்டுக்கு வெளியில உள்ள சந்தியில கூடுறது வழக்கமாப் போச்சு... எப்ப வெளியில வந்தாலும், அவவைப் பார்க்கிற திலையும் தங்கட விருப்பத்தை வெளிப்படுத்தவும் தயாராக நிப்பாங்கள்... ஆனால் அவாவோ ஆரையுமே நிமிர்ந்து பார்க்கமாட்டா...

ஏன் என்ர அக்காக்குக் கூடச் சரியான பொறாமை அவாவில... தன்ர கூட்டாளி அக்காமாரோட சேர்ந்து அவவைப் பற்றிக் கதைக்கிறதிலையே விளங்கும் எனக்கு...

எழிலக்கா வடிவு மட்டுமில்ல... நல்ல அன்பானவவாவும் கூட... அவையின்ர வீட்டு மாமரத்தால விழுகிற மாங்காயப் பொறுக்கக் கேட்டா ஒண்டும் சொல்லாமல் எடுத்துக் கொண்டு போங்கோ எண்டு சொல்லுவா.... எனக்கு மட்டுமில்ல என்ர வயசயொத்த பெட்டையளுக்கும் அவாவ ரொம்பப் பிடிக்கும்.

நாங்கள் லந்தைப் பழம், நாவல் பழம் பொறுக்கினால் அக்காவுக்கும் குடுத்துத்தான் சாப்பிடுவம்... ஒரு நாள், நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாங்காய் பொறுக்கவெண்டு போக, அக்கா அலங்கோலமா வெளியில வந்தா.... தலைமுடியெல்லாம் கலைஞ்சு, உடுப்பெல்லாம் கசங்கித் தோள்பட்டையால கிழிஞ்சு போயும் கிடந்தது.... அக்காட உதட்டில ரத்தம் வேற... எங்களக் கண்ட அக்கா முகத்தை மூடிக் கொண்டு வீட்டுப் பின்பக்கம் ஓடியிட்டா.... அவவைத் தொடர்ந்து வெளியில வந்த அவவின்ர அக்காட புருசன், எங்களக் கண்டதும் நிலைகுலைஞ்சு போனார்... பிறகு சுதாகரிச்சுக் கொண்டு, எங்களப் பேசித் துரத்திப் போட்டார். அதுக்குப் பிறகு நாங்கள் அங்க போறதில்ல... எழிலக்காவும் வெளியில பெரிசா வாறதில்ல... அப்பிடி வந்தாலும், எப்ப பாத்தாலும் சோகமாகவே முகம் இருக்கும். பழைய சிரிப்பே இல்லை....



ஒரு நாள் எழிலக்காவின்ர அக்கா பெரிய சத்தமாக் கத்திக் கேட்டது.... அக்கம் பக்கத்தில இருக்கிறவையெல்லாம் வேலியளுக்கால எட்டிப் பாத்துக் கொண்டிருக்க, எழிலக்காவுக்கு அவான்ர அக்கா, அம்மா எல்லாரும் சேர்ந்து அடிக்கினம்....

“சொல்லடி ஆர் காரணமெண்டு சொல்லு...” ஆனால் அவாவோ எதுவும் பேசாது அமைதியாகவே நிண்டா... அவாவப் பாக்கப் பாவமா இருந்தது எனக்கு.

என்னத்துக்கு ஆர் காரணமெண்டு கேட்கினம் அக்காவை? அவட வயிற்றக் காட்டிக் காட்டி எல்லாரும் பேசினம்.... அக்காட வயிறு இப்ப பெரிசா இருக்கு... பாவம் அக்கா மூச்செடுக்க கஷ்டப்படுறா... எழிலக்காவின்ர அக்காட கணவர நான் பார்க்கிறன்... அவர் எதுவுமே தெரியாதது போல அமைதியாத்தான் நிண்டவர்....

வேலிப்பொட்டுக்கால பார்த்துக் கொண்டு நிண்ட என்னை அம்மா தரதரவெண்டு பிடிச்சிழுத்துக் கொண்டுவந்து “இனி அந்த வீட்டுப் பக்கம் போனால் உனக்குக் காலடிச்சு முறிப்பன்” எண்டு அதட்டிவிட்டுப் போனா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எதுவுமே புரியல்ல... எழிலக்கா அழுதபடியே நிக்கிற முகமும் அவாட எப்பவும் தெத்துப்பல்லுத் தெரியச் சிரிச்ச முகமும்தான் கண்முன்னால வந்து வந்து போனது.

ஊரில இப்ப ஆரப் பாத்தாலும் எழிலக்காவப் பற்றியேதான் கதை.... பெடியளும் இப்ப சந்தியில நிக்கிறேல்லை... என்ர அக்காவும் அவாவப் பற்றிக் கதைக்கிறேல்ல. எழிலக்காவுக்கு குழந்தையொண்டு பிறந்திருக்காம்... அச்சுதான் வந்து சொன்னாள்.... அவளின்ர அம்மா ஆஸ்பத்திரிக்குப் போனபோது எழிலக்காவும் அவான்ர அம்மாவும் அழுது கொண்டு குழந்தையோட நிண்டதெண்டும், அவாட அக்கா சத்தம் போட்டுப் பேசிக் கொண்டு நிண்டதெண்டும் சொன்னாள். தனக்கு எழிலக்காவப் பாக்கப் பாவமாப் போச்செண்டும் சொன்னவள். எனக்கும் அவாவ நினைக்கக் கவலையாக் கிடந்தது.

அதுக்குப் பிறகு நான் அவாவைக் காணயில்ல... அவான்ர தேப்பன் ஊருக்கு எழிலக்காவும் தாயும் போயிட்டனமெண்டு அம்மா ஒருநாள் கமலி அன்ரியோட கதைச்சுக் கொண்டு நிண்டதை நான் கேட்டனான். எனக்கு அவாவையும் அவான்ர குழந்தையப் பற்றியும் கேட்க ஆசையா இருந்தாலும், அம்மா பச்சை மட்டையால அடிப்பா எண்ட பயத்தில நான் கேட்கேல்ல. அதுக்குப் பிறகு நானும் கொன்வென்டல தங்கிப் படிக்கப் போயிட்டன். எழிலக்கான்ர பிரச்சனை எனக்கு மறந்து போனாலும், ஆராவது வடிவான அக்காமாரப் பார்க்கிற நேரமெல்லாம் அவான்ர முகம் நினைவுக்கு வராமலில்லை. லீவுக்கு வீட்டுக்கு வந்தாலும், அவாவைப் பற்றி நினைக்க எங்க நேரமிருந்தது... கொன்வென்டில படிப்பே கதியெண்டு கிடக்கிற எனக்கு ஊருக்கு வந்தால் கொண்டாட்டந்தான்... எண்டாலும் அவான்ர அக்காட வீட்டக் கடந்து போகேக்கையெல்லாம்

எழிலக்காவின் தெத்துப்பல்லோட ஒரு சின்னப் பெட்டை என்னைப் பார்த்து சிரிக்கிறவள்.. அச்சு அசல் அக்காவை போல அவள். கதை கேக்க ஆசையெண்டாலும், அம்மாவின்ர பேச்சுக்குப் பயந்து நான் கேக்கிறேல்ல.

----------

நான் கொஞ்சம் வளந்திட்டன்.... அறிவும் தான்....

சோதினையெல்லாம்முடிஞ்சு அம்மாவோட வீட்டுக்கு வந்து கொண்டிருக்கேக்க பேருந்து நிறுத்தத்தில ஒரு சோடி ஏறின போது, எனக்கு எழிலக்காவின் முகம் சட்டென்று ஞாபகம் வந்தது. நெற்றியில குங்குமம் வைச்சிருந்தா.... கழுத்தில தாலியும் போட்டிருந்தா... பக்கத்தில வந்தவர நான் எங்கயும் கண்ட ஞாபகமில்ல.... அவரோட அவா தெத்துப் பல்லுத் தெரியச் சிரிச்சுக் கதைக்கிறா... இடைக்கிடை என்னையும் அம்மாவையும் பார்க்கிறா.... நான் அம்மாவைச் சுரண்டி அம்மா அதில இருக்கிறது எழிலக்கா மாதிரியே இருக்கு... அவாவோ அம்மா...எண்டன். அம்மா என்னை முறைச்சுப் பார்த்திட்டு ...பிராக்குப் பாக்காமல் பேசாமல் இரு..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு அதட்டிப் போட்டு, அவள் எங்கயிருந்தாலும் நல்லாயிருக்கட்டும் எண்டு வாயுக்குள்ள முணுமுணுக்கிறா.

இந்த அம்மா எப்பவும் இப்பிடித்தான்... எனக்குள் பல கேள்விகள்... எழிலக்காவைச் சுற்றிச் சுற்றியே என் எண்ணமெல்லாம்.... கூடவே அவாக்குப் பிறந்த குழந்தையின் நினைப்பு வேறு...

எங்கட ஊர் நிறுத்தத்தில பஸ் நிக்க, நானும் அம்மாவும் இறங்கிற நேரம் கடைக்கண்ணால எழிலக்காவப் பார்க்கிறன்... அவவும் என்னையும் அம்மாவையும் ஒரு தடுமாற்றத்தோடதான் பாக்கிறா...

--------------

ஆரோ பொம்பிளை பேசிற சத்தமும், "அம்மா..... அம்மா...." எண்டு சின்னப் பெட்டையொருத்தியின் அலறலும் கேட்க, மதிலருக ஓடுறன் நான்... இப்ப வேலியுமில்ல ஆர் அழுகிறதெண்டு பார்க்க... எல்லாம் சுத்து மதில் கட்டி வைச்சிருக்கு.... முதன்முதலா இந்தச் சுத்து மதிலில ஆத்திரம் பொங்குது எனக்கு.

அம்மா என்னை முறைச்சுப் பாத்துப் போட்டு, "போனவள்தான் போனாள், தான் சுமந்து பெத்த அந்தப் பிள்ளைய ஒரு நல்ல இடத்தில விட்டிட்டுப் போயிருக்கலாமே.... பாவி.... அவள் போய் சந்தோசமா வாழ, அவள்ள வயித்தில பிறந்த குற்றத்துக்காக அந்தக் குழந்தை எல்லாரட்டையும் எவ்வளவு துன்பத்தை அனுபவிக்குது.... பார்" அம்மா வீட்டிலிருந்தவங்களுக்கும் கேக்கிற மாதிரித்தான் பேசினவா...

எனக்கு அப்பவே விளங்கியிட்டுது அழுகிறது எழிலக்காவின்ர பிள்ளையெண்டு. மனம் கனக்கிது.

'ஏன் அந்தக் குழந்தைக்கு எழிலக்கா மட்டுமே பொறுப்பு அவாட அக்கான்ர புருசனும்தான பொறுப்புச் சொல்ல வேணும்? நான் வாய் திறந்து சொல்லேல்ல. சொன்னால் அம்மாட்ட வாங்கிக் கட்டியிருப்பேன். அம்மாவுக்கு எழிலக்கா மேல கோபமெண்டில்ல. அந்தப் பிஞ்சுப் பெட்டையின்ர அலறலின் வேதினைதான் எழிலக்கா மேல கோவத்தைக் கொண்டு வருகுதெண்டு என்னால புரிஞ்சு கொள்ள முடிஞ்சுது. ஆனாலும் தவறு செய்தவனும் சரி... அந்தத் தவறால் பாதிக்கப்பட்ட எழிலக்காவும் நல்லாயிருக்கும் போது எந்தத் தவறும் செய்யாத அந்தக் குழந்தை?????

அழுகிற குழந்தையின் வேதனைக் குரலக் கேட்க கேட்க என்ர மனசிலயும் எழிலக்காட வடிவான முகம் மறைஞ்சு.... அழகான அவாட தெத்துப் பல்லு ரண்டும் இப்ப முன்னுக்கு நீட்டியபடி கோரமாய் ஒரு முகம் தோன்றுது....

அலறல தாங்க மாட்டாமல் நான் காதுகளப் பொத்திக் கொள்ளுறன், கண்ணில ஒரு சொட்டுக் கண்ணீர்.

*2019*

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# ஒரு கையோசை

வாணிக்குத் தன்னை நினைக்கையில் கோபம் கோபமாக வந்தது.

"நான் என் வாழ்நாளில் எவ்வளவு பெரிய முட்டாள்த் தனத்தைச் செய்திருக்கிறன்? என்னால என் குடும்பத்துக்குத் தான் கஸ்டம்" மனம் நொந்து தனக்குள் புலம்பியபடி ஜன்னலருகே நின்றபடி வானத்தை அண்ணாந்து பார்த்தாள்.

அவளைப் போலவே கருமேகத்திடையே தெரியும் அந்த வட்ட நிலவும் தனித்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது..... நிலவைச் சுற்றி எண்ணிலடங்கா நட்சத்திரங்களிருந்தும், தனித்திருக்கும் நிலவு போலவே அவளது வாழ்க்கையுமென நினைக்கையில் விழியோரத்தில் வழிந்த கண்ணீர் கன்னத்தில் சுட்டது.

"ஏன் இந்த வாழ்க்கை... எனக்குமட்டும் இப்பிடியேன்?" இயலாமையில் வெளிப்பட்ட மூச்சுக் கூடச் சுடத்தான் செய்தது

"வாணி சாப்பிட வா..." அம்மா அறைக் கதவைத் திறந்தபடி வாணியைத் தேடினாள்.

"ஏன் லையிட்டும் போடாமல் இருக்கிறாய்?" என சுவிச்சைத் தேடிப் போட்டபடி மகளைப் பார்த்தார் பவளம்.

தாயின் முகத்தைப் பார்க்கத் தெம்பில்லாமல் இருட்டையே வெறித்தபடி நின்றவளை, தோளில் கை வைத்த பவளம் "வா சாப்பிட..." என்று நகர்ந்தவளின் முகம் களையிழந்திருப்பதை வாணி அவதானித்தாள்.

"அம்மா அழுதிருக்கிறா... அப்பா ஏதும் பேசியிருப்பார் போல..." என நினைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி தாயைப் பின் தொடர்ந்தவள், வாசலிலிருந்தபடி, இருட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த தந்தையைக் கண்டாள்.

"பெரியம்மா" என ஓடி வந்த தங்கையின் மகளைத் தூக்கி நெஞ்சோடணைத்தபடி சாப்பிடுவதற்கு அமர்ந்தாள்.

உணவைப் பரிமாறியபடியே அவளின் முகத்தைப் பார்த்த தாயிற்கு எந்த உணர்ச்சியையும் வெளிப்படுத்தாது சாப்பிடுவதில் அக்கறையாயிருப்பதாக அவள் காட்டிக் கொண்டாள்.



"வாணி ஏன் இப்பிடிப் பிடிவாதம் பிடிக்கிற? உனக்கு நாங்கள் தீங்கு செய்வமா? அப்பா பாவம். மனுசன் உடைஞ்சு போயிருக்கு" பெருமூச்சு விட்டபடி சொல்லிக் கொண்டே அவளைப் பார்க்க, அவளோ எதுவும் பேசாது தரையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

சாப்பிட்டுக் கைகழுவப் போனவளை, இடைமறித்து அப்பாத்தான் பேச்சைத் தொடங்கினார்.

"வாணி, இறுதியாக ஒரு முடிவு சொல்லு நான் என்ன செய்யட்டும், உன்னை பெண் பார்க்க வரச்சொல்லவோ?" அவரது ஆளுமையை மீறிய தளர்வு குரலில் தெறித்தது.

"அப்பா எனக்கு நாளைக்குமட்டும் கொஞ்சம் நேரம் தாங்கோ, என்னை நம்புங்கோ இனி உங்கள நோகடிக்கமாட்டன்" வாணிக்குத் தொண்டை அடைக்க, செருமி உள்விழுங்கியவள், கையலம்பிவிட்டு நேரே அறைக்குச் சென்றவள் படுக்கையில் விழுந்தாள்.

தலையை யாரோ தடவுவதை உணர்ந்து நிமிர்ந்தவள், அப்பா அருகிலிருப்பதைக் கண்டு எழும்பி உட்கார்ந்தவளைக் கூர்ந்து பார்த்தார் சுந்தரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாணிம்மா உன்னோட நான் கொஞ்சம் கதைக்க வேணும்"

அவளது அறிவுக்கெட்டிய வரை அப்பா இதுவரை அவளையோ, தங்கையையோ அப்படிக் கேட்டதில்லை. என்னவென்றாலும், அம்மாவிடம் கூறியே அவர்களுக்குச் சொல்லச் சொல்வார்.

பிள்ளைகள் பெரியவர்களானதும், அப்பா கொஞ்சம் விலகியிருந்தாலும் மகள்களைக் கவனிப்பதிலும், அக்கறைகாட்டுவதிலும் எக்குறையையும் அவர் வைக்கவில்லை. அவர்களும் அப்படியே. தந்தை மீதிருக்கும் மதிப்பை துச்சமென மதித்ததில்லை. தங்கை ஒருவரை விரும்புகிறேன் என்றபோது, தீர விசாரித்து அவருக்கே அவளைத் திருமணம் முடித்து வைத்தவர். அவர்கள் விருப்பங்களுக்குத் தடையாகவிருந்ததில்லையென்றாலும், சிலவற்றுக்கான கட்டுப்பாடுகளையும் விதித்திருந்தார். பணவசதி பெரிதாக இல்லையெனினும், வரும் வருமானத்தில் குடும்பத்தைச் சிறப்பாக நடத்துவதில் அவர் வெற்றி பெற்றார் என்றே சொல்ல வேண்டும்.

அமைதியாக யோசித்துக் கொண்டிருந்த வாணியையே பார்த்துக் கொண்டிருந்த சுந்தரம், "என்னம்மா யோசிக்கிறாய்? ஏதும் சுகமில்லையோ?" எனக் கேட்டார்.

தந்தையின் கேள்வியில் சுயநினைவுக்கு வந்தவளாய், "அதெல்லாம் ஒண்டுமில்லையப்பா. நீங்கள் ஏதோ பேசவேணுமெண்டீங்களே சொல்லுங்கோ" என்றபடி தகப்பனைப் பார்த்தாள்.

"இதப் பாரம்மா, நான் சுத்திவளைச்சுப் பேசேல்ல... எல்லாம் உன்ர கலியாணத்தப் பற்றித்தான். நானும் உன்ர அம்மாவும் இன்னும் எவ்வளவு காலத்துக்கு இருப்போமெண்டு எங்களுக்குத் தெரியாது. நீயும் இப்பிடிப் பிடிவாதம் பிடித்தால் என்னம்மா அர்த்தம். இங்க பார் உன்ன விட ஐஞ்சு வயசு குறைஞ்ச உன்ர தங்கச்சிகூடக் கலியாணம் கட்டிப் பிள்ளை பெத்து சந்தோசமா வாழ, நீ மட்டுமேன் இப்பிடி இருக்கிறாய்? நீ ஆரையாவது விரும்பியிருந்தால் பயப்பிடாமல் சொல்லு நான் எப்பாடுபட்டாவது கட்டி வைக்கிறன். இல்ல உனக்கேதும் பிரச்சினையெண்டா அதை என்னட்ட சொல்ல விருப்பமில்லையெண்டாலும் அம்மாட்டையோ, இல்லை உன்ர தங்கச்சியட்டையோ சொல்லலாம் தானடா." அவர் தளர்ந்து போயிருந்தார்.

"அப்படியெல்லாம் இல்லையப்பா. நீங்களும் அம்மாவும் இருக்க எனக்கென்ன பிரச்சினை வந்திடப் போகுது? நான் ஆரையும் விரும்பேல்ல. நீங்கள் யோசிக்காதேங்கோ அப்பா" என்றவளை இடைமறித்த சுந்தரம்,

"நாங்கள் எப்படி யோசிக்காமல் இருக்க முடியும் சொல்லு, காணுறவையெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் உங்கட மூத்த பிள்ளையைக் கட்டிக் குடுக்காமல் வைச்சிருக்கிறியள் எண்டு கேக்கும் போது நானும் உன்ர அம்மாவும் பதில் சொல்ல முடியாமல் தலைக்குனிஞ்சிருக்கிறம். ஒரு நல்லது கெட்டதுக்குப் போகும் போது அறிஞ்ச தெரிஞ்சவை கேட்கிற முதல் கேள்வியே இப்ப அதுவாதான் இருக்கு" அவர் வேதனையை மறைக்க முயன்றார். அவள் எதுவும் பேசாது மௌனமாக விருந்தாள்.

"நாளைக்குக் காலை வரைக்கும் நேரம் கேட்டிருக்கிறாய், யோசிச்சு நல்ல முடிவா சொல்லு. நாங்கள் உயிரோட இருக்கிறப் போதே உனக்கொரு கலியாணம் காட்சி நடத்திப் பாத்திட வேணுமெண்டே நினைக்கிறம் உன்ன ஒருநாளும் பாழுங்கிணத்தில விழுத்தமாட்டம். இப்ப வந்த வரன் நல்ல இடமாம், புரோக்கர் சொன்னவர். பெடியன் ஏதோ தனியார் கொம்பனியில நல்ல வேலை. ஆக்களும் நல்லாக்களாம். நானும் எங்கட நடேசன விசாரிச்சுப் பாத்தனான். அவன் அந்த ஊரில ஒரு பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறான். அவனுக்கும் அந்தப் பெடியன தெரியுமெண்டும், நல்ல குணம் நடையுள்ள பெடியன் எண்டும் சொன்னவன். நீ யோசிச்சு நல்ல முடிவாச் சொல்லுவளெண்டு எதிர்பார்க்கிறனம்மா" சுந்தரம் மூச்சு விடாமல் அத்தனையும் சொல்லி முடித்த பிற்பாடு, எந்தப் பதிலையும் அவளிடமிருந்து கேட்காது எழுந்து சென்று விட்டார்.

வாணி மறுபடியும் கட்டிலில் சாய்ந்தாள், "நீ ஆரையாவது விரும்புறாயா?" என்ற அப்பாவின் கேள்வியும் "இல்லை நான் ஆரையும் விரும்பயில்ல" என்ற அவளது பதிலும் அவளது மனச்சாட்சியைப் புரட்டிப் போட்டது.

உண்மையில் அவள் யாரையும் விரும்பவில்லையா...? இல்லையே விரும்பினாளே.... கிட்டத்தட்ட ஐந்து வருடங்கள் மனதுக்குள்ளே அவன் நினைவோடு வாழ்ந்தவள், எப்படி மனச்சாட்சியையும் மீறி அவள்

> **பிள்ளைகள் பெரியவர்களானதும், அப்பா கொஞ்சம் விலகியிருந்தாலும் மகள்களைக் கவனிப்பதிலும், அக்கறைகாட்டுவதிலும் எக்குறையையும் அவர் வைக்கவில்லை. அவர்களும் அப்படியே. தந்தை மீதிருக்கும் மதிப்பை துச்சமென மதித்ததில்லை. தங்கை ஒருவரை விரும்புகிறேன் என்றபோது, தீர விசாரித்து அவருக்கே அவளைத் திருமணம் முடித்து வைத்தவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் விரும்பவில்லையென்று பொய் சொல்ல முடிந்தது?

வினோதன், பெயரைப் போலவே வினோதமாகத்தான் இருந்தான் போலும்.

அவளது இளமைப் பருவத்தில் காலடி எடுத்து வைத்து ஒரு வருடம் கழிந்திருக்கும், அவனுக்கான வருகை அன்றமைந்தது.

"எக்ஸ்க்யூஸ்மீ, இது உங்கடயா?" கையிலிருந்த பேர்ஸைக் காட்டி அவளைக் கேட்டான்.

"இ...ல்...ல..." வார்த்தைகளை விழுங்கியபடி சொன்னவள், ஏதோவோர் ஈர்ப்பின் தகிப்பை உணர்ந்தாள். தொடர்ந்து பத்து நாட்கள் கோவில் திருவிழாவில் அவள் கடவுளை வணங்கியதை விட அவனையே தேடினாள் என்பது கடவுள் அறியாததா?

அவனும் அவளை அடிக்கடி திரும்பிப் பார்க்கவே செய்தான்.

அவனது பார்வைபடவென்று அவன் நிற்கும் திசைநோக்கியே அவளது இருத்தலும் இருந்தது.

மனமெல்லாம் நிறைந்தே போனான். இளமைப் பருவத்தின் தொடக்க வாசலில் நின்றவளுக்கு முதல் முறை இதுதான் காதலென்பது புதிராகவேயிருந்தாலும் புதிதும் கூட. திருவிழா முடிந்தும், அவனைக் காண்பதற்கெனவே கோவிலுக்கு போகத் தொடங்கினாள். தவம் கிடந்தாள். ஆனாலும் ஒருமுறையேனும் தன் நேசத்தை வெளிப்படுத்தும் தைரியம் அவளிடமிருக்கவில்லை ஒரு பெண் போய்த் தன் காதலைச் சொன்னால் அவன் என்ன நினைப்பானோ எனும் எண்ணம் அவளை அவனிடம் பேசவிடாது தடுத்தது.

கொஞ்ச நாட்களில் அவனின் வருகை நின்று போக, யாரிடம் கேட்பது? எங்கே போனான்? என்னவானானென்பது தெரியாது அவள் குழம்பிப் போனாள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவித்தாள். அவனை மறந்திருக்கலாம். ஆனால் அவள் மறக்கவில்லை. மனதால் வாழத் தலைப்பட்டாள். அவளறிவாள் ஒரு கையோசை என்றும் சத்தமில்லாதது என இருந்தும், அதை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தை அவள் வளர்க்கத் தவறிவிட்டாள். அதுவே அவளின் திருமண வாழ்க்கைக்கும், பெற்றோரின் வேதனைக்கும் காரணமாக அமையுமென அன்றே தெரிந்திருந்தால். அந்தத் திறனை வளர்த்துக் கொண்டிருப்பாளோ என்னவோ....

நாளடைவில் தனக்குள்ளேயே அவன் ஞாபகங்களைச் சுமந்தபடி ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கைக்குள் தன்னை நுழைத்துக் கொண்டவள், நாட்களை நகர்த்தலானாள். வயது ஏற ஏறப் பெற்றோரும் வரன் பார்க்க ஆரம்பித்தார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிய வந்த இரண்டு சம்பந்தங்களை அடம்பிடித்தே தடுத்து விட்டாள்.

அதன் பின் தங்கையின் காதல் பிரச்சினை... அவளின் திருமணமெனக் கொஞ்சநாட்கள் அவளைப் பற்றி யாரும் பேசாதிருந்தது அவளுக்கு ஆறுதலளித்தது.

கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னை ஆசுவாசப்படுத்தி மனம் மாற எத்தனித்தவளுக்கு, அவனது திடீர் வருகை அதிர்ச்சியாகவிருந்தாலும், மகிழ்ச்சியையே அளித்தது. ஆனால் காணாமல் போனவன் மீண்டும் அவளெதிரில் வராமல் இருந்திருக்கலாமோ என நினைக்குமளவிற்கு அவனின் வருகையின் பின்னான நிகழ்வுகள் அவளை நோகடித்தன.

தன் நேசம் உண்மையானது, இவ்வளவு காலத்திற்குப் பின் அவன் தனக்கு மீண்டும் கிடைத்திருக்கிறானென எண்ணிப் புளகாங்கிதம் அடைந்தவள், எப்படியாவது தன் காதலை அவனிடம் வெளிப்படுத்த வேண்டுமெனும் முனைப்போடிருந்தாள்.

எப்படியோ துணிந்து கடிதமொன்றெழுதி அவளது நண்பியின் உதவியுடன் அவனிடம் சேர்ப்பித்து, பதிலுக்காகக் காத்திருந்தாள். ஆனால் அவன் எந்தப் பதிலையும் சொல்லாதது மட்டுமல்ல, அவளைக் காணுமிடமெல்லாம் அற்பமாகப் பார்க்கத் தொடங்கினான்.

அவன் அறிந்திருக்கவேயில்லை. தன்னை வருத்தி வேறொருவனிடம் மனதைப் பறிகொடுக்காது அவனையே நினைத்து வாழ்ந்தவளுக்கு அவன் அளித்த மிகப் பெரிய பரிசு வேதனையென்று. பிடிக்கவில்லையென்று சொல்லியிருந்தால் கூட அவ்வளவு வேதனைப்பட்டிருப்பாளோ தெரியாது, ஆனால் அவளின் நடத்தையைக் கேலிக்குள்ளாக்கியது அவளது மனதை வைராக்கியப்படுத்த உதவியது. அன்றிலிருந்து அவனைப் பார்ப்பதைத் தவிர்க்க ஆரம்பித்தாள்.

அடுத்த அறையில் குழந்தையின் அழுகையொலி கேட்டு தன் நினைவிலிருந்து விடுபட்டவள், அருகில் படுத்திருந்த தாயை எழுப்பினாள்.

"அம்மா எழும்புங்கோ, பாமதிட பிள்ளை அழுகுது. பாலுக்காயிருக்கும். அவள் நித்திரை போல ஒருக்காக் கதவைத் தட்டிவிடுங்கோ" என்றவள், மறுபடி கட்டிலில் அமர்ந்தாள்.

முடிவு சொல்வதற்கு நாளை காலை வரை அவளுக்கான நேரமிருப்பதை உணர்ந்தபடி, கண்களை மூடினாள்.

"ட்ரிங்.... ட்ரிங்..." மணிக்கூடு ஆறு மணியென அலாரம் அடித்து அவளை உறக்கத்திலிருந்து எழுப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ மணி ஆறாச்சு.... எப்பிடி இவ்வளவு நேரமும் உறங்கினனான்...?' எனத் தனக்குள்ளே பேசிக் கொண்டு எழும்பிக் கண்ணாடி முன்நின்றாள். உடலும் மனதும் ஆறுதலாக இருப்பதை உணர்ந்து தனக்குள் மென்மையாகப் புன்னகைத்தவள், அப்பாட்டையும் அம்மாட்டடையும் என் முடிவைச் சொல்ல வேணும், அவையின் சந்தோசத்தைக் கண்ணால காண வேணும் நான்' தனக்குள் முணுமுணுத்தாள்.

வேலைக்குத் தயாராகி அடுப்படியிலிருந்த தாயை நோக்கிப் போன வாணிக்குக் கற்பனையொன்று எட்டிப் பார்க்க, குபுக்கெனச் சிரித்துவிட்டாள். சிரிப்பொலி கேட்டுத் திரும்பிப் பார்த்த பவளத்திற்கு ஒரே ஆச்சரியம்!

"என்ன சிரிப்பு...?" கன்னத்தில் குழிவிழ வெண்பற்கள் காட்டிச் சிரித்த மகளை ஆவலோடு பார்த்தபடி கேட்டார், பவளம்.

"ஒண்டுமில்லையம்மா... எனக்கு ரீ தாங்கோ... அப்பா எங்கயம்மா?" என்றபடி கண்களால் சாலையில் தகப்பனைத் தேடினாள் வாணி.

"உங்கதான் இருப்பார்" என்றபடி தாயார் கொடுத்த தேநீரை வாங்கிக் குடித்தவள், சாப்பாட்டுப் பார்சலை பாக்குக்குள் திணித்தபடி "நான் போயிட்டு வாறன்" என்று வெளியில் வந்தாள் வாணி. முற்றத்தில் தந்தையார் உலாவுவதைக் கண்டு அவரருகில் வந்தாள்.

மகளிடம் தென்பட்ட வித்தியாசத்தைக் கண்ட பவளத்திற்கு ஏதோ இனம்புரியாத மகிழ்ச்சி. கண்களில் நீர் அரும்பியது.

"என்னம்மா வேலைக்கு வெளிக்கிட்டாச்சோ?" என்ற தந்தையின் கேள்விக்குள் வேறு ஓர் விடையின் எதிர்பார்ப்பிருப்பதை அவளறிவாள்.

"அப்பா, நீங்கள் அவைய பாக்க வரச் சொல்லுங்கோ" என்றவள், கேற்றடியில் நின்ற அடுக்குமல்லி மரத்தில் பூவொன்றைப் பறித்து நாசியில் முகர்ந்து, நீண்ட சடையில் செருகியபடி கேற்றைத் திறந்து வெளியேறினாள்.

தங்கையின் குழந்தை இரு கைகளையும் தட்டி ஓசையெழுப்பியது அவள் காதில் விழுந்தது.

பங்குனி 2019, காற்றுவெளி

• • • •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# பகல் நிலவு

பாரதிக்கு மனம் ஒரு நிலை கொள்ளாமல் தவித்தது. அவள் ஒரு போதும் கலங்கியதில்லை என்று சொல்ல முடியாது. எத்தனையோ விடயங்கள் அவளைப் புரட்டிப் போட்டிருந்தாலும், அந்த வார்த்தையில் அவள் மனம் உடைந்தே போனாள். "யாருக்காக நான் உழைக்கிறேன். இவர்களுக்காகத்தானே. அதை எப்ப வாவது நான் சொல்லிக் காட்டியிருக் கிறேனா? என்றைக்காவது என் ஆசை களை இவர்களிடம் சொல்லி அதை நிறைவேற்றக் கேட்டிருக்கிறேனா? ஏன் எதையும் புரிஞ்சு கொள்ளாமல் இப்படி மனச நோகடிக்கிற வார்த்தையைத் தம்பி சொன்னான்?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ வீட்டிலயிருந்து ஓய்வெடு என்று யாராவது சொல்லமாட்டார்களா. என்று எத்தனை நாள் என் மனம் ஏங்கியிருக்கும். யாராவது புரிஞ்சு கொண்டார்களா? இல்லையே...
நான் ஏசி றூமில இருந்த இடத்தில இருந்து வேலை செய்யிறனாம்.... எனக்கென்ன குறையென்று கேட்கிறார்களே?.......
எனக்கென்ன குறையிருக்கிறது.... என்ன கஸ்டமிருக்கிறதென்று யாராவது ஒருநாள் கேட்டார்களா? சம்பளம் எடுத்து தருகிறேன்... உங்கள் தேவைகள் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. அதில் எனக்கு சந்தோசம்தான்.... உங்களை சந்தோசமாக வைச்சிருக்க வேணுமெண்டு தான் நானும் இவ்வளவு கஸ்ரப்படுகிறன்.



காலையில போனால்பின்னேரம் வரும் வரைக்கும் அந்தக் கணனிக் கீபோர்ட்ட தட்டித் தட்டிக் கைகள் வலியெடுக்கும். விரல் எலும்பெல்லாம் உடைஞ்சு போறது போல இருக்கும்.... நரம்புகள் புடைச்சுக் கொண்டிருக்கும், அதையெல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேனா? நான் தட்டுற தட்டில என்ர கீபோர்ட் எழுத்துக்கள் கூட அழிஞ்சு போச்சுது எண்டு கூட வேலை செய்றதுகள் நக்கலடிக்கும் போது நானும் கூடச் சேர்ந்து சிரிப்பேன் வலியை மறைத்து... நீங்கள் அறிஞ்சு கொண்டனீங்களா? இதையெல்லாம் அந்த நேரமே கேட்டுவிட மனது துடித்தாலும் எதையும் பேசாது இருந்துவிட்டாள் அவள்.

நினைக்கும் போது கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டுவந்தது... தான் நிற்பது பேருந்து நிலையம் என்பதை உணர்ந்து கண்ணீரை அடக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். அது காலை நேரமென்பதாலும், வாரத்தின் முதல் நாளென்பதாலும் பேருந்திற்காகக் காத்திருக்கும் சனக் கூட்டம் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. ஹெட்டியாவத்தையிலிருந்து தெஹிவளை செல்லும் **176** பேருந்திற்காக அவள் காத்திருந்தாள்.

எப்பிடியும் இன்று பேருந்துக்குள்ள நகர முடியாதபடி சனம் நிரம்பி வழியப் போகிறது. என மனதிற்குள் எண்ணியபடி நின்றவளுக்கெதிரே பேருந்து வந்து நின்றது. ஏற முண்டியடித்த சனக்கூட்டத்துக்குள் நுழைந்து அவள் தான் வழமையாக இருக்கும் பின்பக்க யன்னல் கரையோர இருக்கையில் ஆசுவாசமாக அமர்ந்தாள்.

"ரிக்கற் ஹண்ண.... ரிக்கற் ஹண்ண...." என்றபடி, வந்த நடத்துனர், பின் பக்க கதவால் ஏறியவர்களைப் பார்த்து, "இஸ்ஸறாட்ட யன்னக்கோ.... இட திப்ப நே..." எனக் கத்திக் கொண்டிருந்தான். சில பேருந்துகளில் அவள் ஏறுவதைத் தவிர்த்தே வந்தாள். ஒருசில நடத்துனர்களின் கசப்பான செயற்பாடுகளே அதற்குக் காரணமானது.

பாரதி நிமிர்ந்து பார்த்தாள். இவனா... எந்த நேரமும் கத்திக் கொண்டும், மீதிக் காசு கேட்டால் எரிந்து விழுந்தபடியுமே இருப்பவன். பேருந்தில் ஏறுபவர்களைக் கொஞ்சம் கூட மதிக்காமல் பேசுவான். ஏதோ இலவசமாக ஏற்றுவது போல்தான் அவன் பேச்சும் செயலும்.

"மருதான எக்கக்" என்றபடி இருபது ரூபாவை நீட்டினாள் பாரதி, "ருபியல் துணக் தென்ன" என்றவனை பார்த்து, "மாறு சல்லி நாநே" என்றாள் அவள்.

"கையில் சில்லறைகளை வைத்துக் கொண்டு மீதிக் காசு தருவதற்கு எவ்வளவு தயக்கம்..." மனதிற்குள் அவனை ஏசியபடி மீதிக் காசுக்காக அவனைப் பார்த்தாள். அவளின் பார்வையை உணர்ந்தவன் "இத்று ருபியல் ஹத்த பஸ்ஸ தென்னங்" என்றபடி நகர்ந்தவனை முறைத்தபடி, இண்ணைக்கு மிச்சக்காசு கிடைச்ச மாதிரித்தான். என மனதிற்குள் எண்ணியபடி ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.

அவள் மனம் போலவே கொழும்பு நகரவீதிகளும் பரபரத்துக் கொண்டிருந்தது. வாகனங்களின் நெரிசலும், வேலைக்குப் போகும் மனிதர்களின் நடமாட்டமும் என வீதிகள் காட்சியளித்தன. எந்த ஒரு காட்சியும் மனதில் பதிவதாக இல்லை. குழம்பிய குட்டையாக மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலங்கிப் போயிருந்தது. மீண்டும் மீண்டும் அந்தச் சொல்லே அவளை உலுக்கியது. எதை உருப்போட்டும் அவள் மனம் அமைதி பெறுவதாக இல்லை. இதில் அவள் பிழை என்ன எனத் தேடத் தொடங்கினாள்.

ஜன்னல் வழியே வந்து தீண்டிய தென்றலால் மனம் கொஞ்சம் ஆறுதல் அடையவும், கண்கள் தானாக மூடிக் கொண்டன.

"அக்கா நான் கேட்டது என்னாச்சு?" தம்பியே பேச்சை ஆரம்பித்தான்.

"என்னடா கேட்டனீ? எனக்கு ஞாபகமில்ல... என்னெண்டு சொல்லு" தலை வாரிக் கொண்டிருந்த பாரதி கேட்டாள்.

"என்னக்கா நீ? எதையுமே ஞாபகமில்லையெண்டு சொல்லுற? அண்டைக்கு பைக் வேண்ட காசு வேணுமெண்டு கேட்டனே. என்னால உந்த பஸ்ஸுக்குள்ள அடைஞ்சு கொண்டு எங்கயும் போகேலாது..."

"கொஞ்ச நாள் பொறுத்துக் கொள் 'யது'.... தங்கச்சி வாற வருசம் ஏஎல் எக்சாம் எடுக்கிறாள். அவள்ள படிப்புச் செலவுக்கே எடுக்கிற சம்பளம் காணாமல் கிடக்கு. அதுக்கிடையில உனக்கு பைக் எடுக்கிறதெண்டால் நான் எங்க போறது....? கொஞ்சம் யோசிச்சு பார்... பொறுத்துக் கொள். தங்காட படிப்பு முடிய உனக்கு லோன் போட்டெண்டாலும் காசு தாறன்" அவள் பொறுமையாக எடுத்துச் சொன்னாள்.

"அவள்ற படிப்பு முடிய இன்னும் ஒரு வருசம் இருக்கு. அதுவரைக்கும் என்னால முடியாது. உனக்குக் காசு தர முடியாட்டி சொல்லு. நான் என்ர வழியப் பாத்துக் கொள்ளுறன்... எப்ப பாரு என்ன கேட்டாலும் ஏதோ ஒரு சாக்குப் போக்கு சொல்லு... உனக்கென்ன ஏசி அறையில ஒரே இடத்தில இருந்து கொண்டு வேலை...." அவன் கூச்சல் அடுத்த வீட்டுக்காரரையும் எட்டிப் பார்க்க வைத்தது.

"ஓம்.... நான் இருந்த இடத்த இருந்து கொண்டு வேலை செய்யுறன்.... அதுதான் நீங்கள் இப்பிடிக் கதைக்கிறீங்கள்" அவள் குரல் கரகரத்தது.

அதற்கிடையில் அம்மா வந்து, "இப்ப ஏன்டா கத்துறா... அடுத்த வீட்டுக்குக் கேட்கிற மாதிரி.... சனங்கள் என்ன நினைக்குங்கள்" என்றபோது அவன் ஒன்றும் சொல்லாது, தாயையும் தமக்கையையும் முறைத்துவிட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று விட்டான்.

ஒரு பெருமூச்சுடன் தாயும் அகன்று விட, பாரதிக்கு மனது வலித்தது. வரத் துடித்த கண்ணீரை கஸ்டப்பட்டு அடக்கிக் கொண்டு சேலையையுடுத்தி, தாய் தந்த சாப்பாட்டுப் பார்சலை கைப்பைக்குள் திணித்தபடி வெளி இறங்கினாள் அவள்.

குறைந்த செலவில் கொழும்பில் வீடு வாடகைக்கு எடுப்பதென்றால் தோட்டங்கள் எனப்படும் சிறுசிறு ஒழுங்கைகளை அடைத்திருக்கும் வீடுகளையே வாடகைக்குப் பெறமுடியும். அடுத்தடுத்த சுவர்களோடு ஒட்டினாற் போலிருக்கும் வீடுகளில் சாதாரணமாகப் பேசினால்கூட அருகிருக்கும் வீடுகளிலுள்ளவர்களுக்கு கேட்கும். அதுவும் தம்பி அந்தக் காட்டுக் கத்தல் கத்தினான். கேட்காமலா இருந்திருக்கும். இதோ அன்றைய நாளுக்கான தலைப்போடு உங்கள் வீட்டுப் பிரச்சினையை நாங்கள் கேட்டுவிட்டோம் என்பது போல் பொதுப் பைப்பில் பாத்திரங்களையும் துணிகளையும் கழுவுதற்குக் குவித்து வைத்திருந்த பெண்களின் கண்கள் அவளை மொய்ப்பதை அவள் அறிந்து, தலையை நிமிராது நடந்தாள். எப்படியும் அவள் போன பின்பு அவர்கள் ஏதும் கதைக்கத்தான் போகிறார்கள் என்பதை அவள் அறிவாள்.

“பஞ்சிகாவத்த... மருதான... புஞ்சி பொரல்ல... ராஜகிரிய....” ஏதோ ராகத்துடன் சொல்லும் கவிதை நயத்துடன் நடத்துனரின் குரல் செவிகளில் விழ, கண்களைத் திறந்து பார்த்தாள்.

ஆமர் வீதி பேருந்து நிலையத்தில் நெருக்கிக் கொண்டு சனங்கள் பேருந்தில் ஏறிக் கொண்டிருந்தார்கள். நிறைமாதக் கர்ப்பிணிப் பெண் போல பேருந்து நகர முடியாமல் நகர்ந்தது.

பாரதி கொழும்புக்கு வேலை கிடைத்து வந்து ஐந்து வருடங்களாகிறது. இந்த ஐந்து வருடங்களில் அவள், அந்த பேருந்து போல எவ்வளவு பாரங்களைச் சுமந்திருக்கிறாள் என்பதை யாரும் அறியார்.

வேலைக்கு வந்த அடுத்த வருடமே அம்மா, தம்பி தங்கை என குடும்பத்தையும் தன்னோடு அழைத்துக் கொண்டாள். அவர்கள் அருகே இருப்பதால் அவளுக்கு ஒரு பலம் என ஒவ்வொரு நாளும் நினைப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்தானே அவள் ஆதாரமும் கூட.

ஆனால் இந்தத் தம்பி ஏன் இப்படிக் குடும்ப நிலையை புரிந்து கொள்ளாமல் கதைக்கிறான்... படியென்று சொன்ன போது, அதிலும் அக்கறை காட்டவில்லை.... எப்பொழுதும் பிடிவாதமான பேச்சு... ஒரே ஆம்பிளைப் பிள்ளையெண்டு அம்மா செல்லம் குடுத்து கெடுத்து வைச்சிருக்கிறா.. ஆனாலும் அவனும் பாவம்தான்... தன் வயதொத்த ஆண்பிள்ளைகள் அனுபவித்துக் கொண்டிருக்கும் எந்த மகிழ்வையும் அவன் அனுபவிக்கவில்லை. ஒருவேளை அப்பா இருந்திருந்தால், அவனுக்கானது கிடைத்திருக்குமோ?.அவன் நிலையை நினைத்து மனம் வருந்தவே செய்தது... அவன் மேல் வெறுப்பை விட, அனுதாபமே மிஞ்சி நின்றது பாரதிக்கு.

"புஞ்சி பொரல்ல.... ராஜகிரிய.... நுகேகொட.... தெஹிவல.... மருதான ஆனந்தக் கொலேஜ் பஹின்ன கட்டிய, பஹின்ன கட்டியட்ட இட தென்ன...." நடத்துனர் சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

மருதானையில் இறங்கியவர்களை விட ஏறியவர்கள் அதிகம்.

ஒருவழியாக பேரூந்தில் ஏறியவர்களைத் தள்ளிக் கொண்டு இறங்குவதற்குள் உயிர் போய் திரும்பி வந்தது அவளுக்கு....

திருவிழாக் கூட்டம் போல மருதானை பேரூந்து நிலையம் நிறைந்து வழிந்தது. வெவ்வேறு இடங்களிலும், தூரப் பிரதேசங்களிலிருந்தும் கொழும்பு நகருக்குள் புகையிரதத்தில் வேலைக்கு வந்துபோவோர் மருதானை புகையிரத நிலையத்தில் இறங்கியே பேரூந்து எடுப்பார்கள்.

தொலைபேசி அவசரமாக ஒலித்தது. அம்மாதான்....

என்னவாக இருக்கும்? தம்பி ஏதும் அம்மாவோட சண்டை போட்டிருப்பானோ?;

பயத்துடன் எடுத்து "அம்மா" என்றாள்.

"ஏன் பிள்ள தேத்தண்ணியும் குடிக்காமல் போனனீ?" அம்மாவின் குரல் தழுதழுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போதுதான் தான் தேநீர் குடிக்காமல் வந்தது அவளுக்கே ஞாபகத்துக்கு வந்தது.

“அம்மா... மறந்து போனன்...” என்றாள்.

“சரி கடையில பால் பக்கெற் ஒண்டு வேண்டிக் குடி” என்ற அம்மாவுக்கு “சரியம்மா” என்றுவிட்டுத் தொலைபேசியைத் துண்டித்தவள், திரும்பிப் பார்க்கையில் அவளைக் கடந்து, அவள் வந்த பேருந்து சனங்களை நிறைத்தபடி சென்றது. சிலர் உள்ளே இடம் இல்லாததால் படிகளில் தொங்கியபடி போய்க் கொண்டிருந்தார்கள். நேரத்துக்கு வேலையிடங்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்ற நினைப்பே ஆபத்தையும் பொருட்படுத்தாது அவர்களை இப்படிப் படிகளில் தொங்கியபடி பயணிக்க வைக்கின்றது.

அவரவருக்கு அவரவர் கடமையும், தேவையும் தானே முக்கியம்.

“யார் என்ன சொன்னாலும் என் கடமையை நான் சரிவரச் செய்ய வேணும்..” மனதில் இருந்த பாரம் கொஞ்சம் குறைய நிதானமாக அலுவலகம் நோக்கி நடந்தாள் பாரதி.

இராப் பொழுதுகளில்

ஒளி வீசும் மதியவள்,

பகற் பொழுதுகளில்

பகலவனுக்குத் தன்னொளி ஈய்ந்து

தன்னை மறைக்கிறாள்....

*2019, பூங்காவனம்*

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# பால் ரீ



"ஐயோ.... ஐயோ பால்ரீ கிணத்துக்க விழுந்துக் கிடக்கிறானாம்" கூக்கிரலோடு ஓடும் சனங்கள்....

"என்ன பால் ரீ கிணத்துக்க விழுந்திட்டானாமோ?"

ஆளுக்கொரு கேள்விகள் அலை மோத ஓட்டம் தொடர்ந்திருந்தது.

மேசையில் கிடந்த கண்ணாடியை எடுத்தணிந்து கொண்டு தெருவிற்கு இறங்கினேன். என்னையோ... என் பதட்டத்தையோ யாரும் கண்டு கொள்வதாயில்லை.

"டேய் தம்பி நில்!..." என்னுடைய உத்தரவுக்கு கட்டுப்படும் மனநிலை அவனுக்கிருக்கவில்லை.

"ஐயோ சேர் பால்ரீ கிணத்துக்குள்ள செத்து கிடக்கிறானாம்...." மூக்கால் வழிந்த சளியை பிறங்கையால் துடைத்தபடி நின்று நிதானிக்க நேர மற்று ஓடிக்கொண்டே சொல்லிக் கொண்டு போனான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன....?" என் விழிகள் கண்ணாடிக்கு வெளியால் வந்து விழுமளவுக்கு விரிந்தது.

கடற்சுழிக்குள் மாட்டிய சிற்றுயிரெனத் தலை கிறுகிறுக்க அருகிலிருந்த கேற்றின் கம்பியில் பிடித்தபடி நின்றேன். வெற்றிலைக் காவி படிந்த பல்லைக் காட்டி பால்ரீ சிரித்தபடி வானத்தில் பறந்து கொண்டிருப்பதாய் ஒரு பிரமை.

'சீச்சி அவன் செத்திருக்கமாட்டன்.... அவனுக்கு ஒண்டுமே நேராது... ஏனெண்டால் அவன் நல்லவன்... மற்றவர்களை நோகடிக்கத் தெரியாதவன்.... தனக்காக அல்லாமல் தன்னைச் சார்ந்தவர்களுக்கெண்டே வாழுறவன்... அவன் எப்பிடி இவ்வளவு சீக்கிரமாகச் செத்துப் போக முடியும்? ஓ... எல்லாரும் சொல்லுமாப் போல கடவுள் நல்லவைய இந்த உலகத்தில வாழ விடாமல் தன்கூட கூட்டிக் கொண்டு போய் வைச்சிருப்பாரோ? கடவுளே.... இந்தச் சனங்கள் கத்திக் கொண்டு போறது போல அது அவனாக இருக்கக் கூடாது.... அப்பிடி அவன் செத்திருந்தால் அவன் தமக்கை எப்படி வேதனைப்படப் போகிறாள்? என்ர அக்காவுக்காகவே வாழுறன் எண்டு சொல்லுவானே, இப்போது அவளைத் தவிக்கவிட்டுச் செல்ல அவன் எப்படி விரும்பியிருக்கக் கூடும்' மனம் அனலடுப்பில் விழுந்த பூச்சியெனத் துடித்தது. அவன் பேசிச் சிரித்தவனை ஒவ்வொன்றாய் ஞாபகத்தில் வந்து மனதைக் குதறியது.

"சேர் உங்களுக்கொண்டு தெரியுமே!" வெற்றிலைக் கறை படிந்திருந்தது அவன் பற்களில்.

"சொன்னாத்தானையடா தெரியும்... சொல்லன் கேப்பம்" அவனது கதைகளைக் கேட்கும் ஆவல் எனக்குண்டு. வெறுமை படிந்த மனதில் ஒரு பரவசம் கோர்க்கும் நேரங்கள் அவை.

"எங்கட ராசமக்கைய தெரியுந்தான, அவான்ர வீட்டுக்கு ஆரோ நேற்றிரவு ஊமல்கொட்டையால எறிஞ்சு போட்டாங்களாம். மனிசி இப்ப தூசணங்களால விட்டுக் கேட்குது... எல்லாம் உந்தப் பெடியளாத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவேணும்... சும்மா சும்மா அந்த மனுசிய சீண்டிவிட்டு வேடிக்கை பாக்கிறாங்கள். தனிய இருக்கிற மனிசி பாவம்தான சேர்!" பச்சாதாபப்பட்டான்.

"சேர் நாளைக்கு எங்கட கோயில்ல மடை... மறக்காமல் வாங்கோ... நிறைய மோதகம் புக்கை எல்லாம் குடுப்பினம்"

"சேர் உங்கட வீட்டு தென்னை மரப் பொந்துக்குள்ள இருக்கிற கிளிக் குஞ்சை நான் பிடிக்கவே. அக்கான்ர மூத்தவன் ஒரே ஆக்கினை..."

வெற்றிலை போடும் பழக்கமற்ற நான், அவனுக்கென வெற்றிலை பாக்கை வாங்கி வைக்க மறப்பதில்லை.

"ஏன் சேர் வெத்திலை போடுறேல்லை... ஒருநாளைக்கு போட்டுப் பாருங்கோவன்" வெற்றிலை போட்டு சிவந்துபோன பற்களைக் காட்டியபடி என்னைக் கேட்பானே.

தேகம் நடுங்க கேற்றடியிலேயே அமர்ந்துவிட்டேன்.

பால்ரீக்கும் எனக்குமான அன்பை நெய்த இறைவனை நோகிறேன். அவன் மீண்டு வந்துவிடவேண்டுமென்று... வந்துவிடுவானா?

தரம் ஐந்து வரை இருக்கும் பாடசாலையின் அதிபராய் நான்தான் அந்த ஊரில் இருக்கிறேன். பால்ரீயின் சிறுபராயம் எனக்குத் தெரியா விட்டாலும், அவனின் பதின்ம வயதில்தான், நான் அந்த ஊருக்கு மாற்றலாகி வந்திருந்தேன். உடன்பிறந்தவர்களுக்கென்றே வாழ்க்கை சென்றதில் எனக்கானதை இழந்துவிட்ட அபாக்கியசாலிகளில் நானுமொருவன். அநாதரவாகி முற்றுப் பெறாதிருந்த என்வாழ்வில் பாடசாலை ஒன்றே துணை.

தூக்க முடியாத பாரமென்றில்லாவிட்டாலும், ஒண்டிக்கட்டையான எனக்குத் தேவையான பொருட்களுடன் இரண்டு கரங்களிலும் ஒவ்வொரு தோல்பை. பள்ளமும் திட்டியுமான மணற்பாதைகள்... மிகவும் பின்தங்கிய கிராமம் அது. நானேதான் விரும்பிக் கேட்டேன் மாற்றத்தை. ஆடம்ப ரங்களும்அனாவசியங்களுமே வாழ்க்கையாய்க் கொண்டாடுவோரிடமிருந்து என்னை விலக்கிக் கொள்ள விரும்பி எடுத்த முடிவு, அந்த ஊருக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றல். வீதிகளின் இருமருங்கிலும் சிறு பற்றைகளாய் நீண்டிருக்க, தார் என்றால் என்னவென்றே அறியாத மணற் பாதைகள் நேராகவும், வளைந்தும் நெளிந்தும் நகர்ந்து கொண்டிருந்தன.

திடீரென பற்றைக்குள்ளிருந்து ஒரு உருவம் எதிரே வந்து நின்றது. கைகளில் பனம்பழம்... அப்போது பனம்பழக் காலம். விழுந்த பனங் காய்களை மாடுகள் ஈய்த்துக் கொள்வதை வேடிக்கை பார்ப்பதில் மனதை பறிகொடுத்தபடி நடந்து கொண்டிருந்தேன். நாக்கை மூக்கின் துளை வரை விட்டு ரசித்து ருசித்து பனங்காய் தின்னும் மாடுகளோடு சரசம் புரிந்தபடி நடந்த எனக்கு, எதிரில் திடீரென வந்தனைக் கண்டதும் ஒரு அதிர்ச்சி. அவன் கையில் நல்ல பழுத்த பனம்பழம். வாசமோ மூக்கைச் சுண்டியிழுத்தது. பரட்டைத் தலை.... அரையால் கழண்டு விழுவே னென்றிருந்த காற்சட்டை.... கோடை காலங்களில் வரண்டு பிளந்திருக்கும் தண்ணீரற்ற குளத்தைப் போன்று பொருக்குப் படிந்திருந்த தேகம். பார்த்தால் வெகுளியாய் தோன்றினான்.

“ஆர் நீங்கள்.... எங்க போறியள்?” என் தோற்றத்தை கண்டு மரியாதையை வார்த்தைகளில் கோர்த்திருப்பான் போலும்.

“நான் இந்த ஊரில இருக்கிற பள்ளிக்கூடத்துக்கு அதிபரா வந்திருக் கிறன்.”

‘ஓ...” தலையாட்டியவன், ‘என்ர அக்கான்ர மோனும் அந்தப் பள்ளிக்குடத்திலதான் படிக்கிறான்.” ஏதும் சிபாரிசை எதிர்பார்க்கிறானோ? நான் மனதுக்குள் எடைபோட்டேன்.

‘ஓ... நீர் எங்க படிக்கிறீர். உம்மட பேரென்ன?” என் கேள்விக்கவன் பதில் சொல்வதற்குள், குளக்கட்டிலிருந்து தூண்டில் போட்டு மீன் பிடித்துக் கொண்டிருந்த அவனின் வயதொத்தவர்கள் அவனைப் ‘பால் ரீ.... பால்ரீ.... இஞ்சை ஒருக்கா வாடா... உதாரடா உன்ர கொத்தானட்ட கசிப்பு குடிக்க வந்தவரோ” என்று கத்த ஆரம்பித்தார்கள்.

‘போங்கடா... என்னைப் பால்ரீ எண்டு சொன்னால் உங்களோட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கதைக்கமாட்டன்.... அவர் எங்கட பள்ளிக்குடத்துக்கு புதுசா வந்த அதிபர்" சொன்னபடியே அவன் என்னைப் பார்த்தான்.

நான் அவர்களின் பேச்சைக் கணக்கில் கொள்ளாது அவனை நோக்கி 'உன்னை ஏன் அவங்கள் பால்ரீ எண்டு கூப்பிடுகினம்" என்றேன்.

'அதுவா சேர் அது வந்து.... வந்து.... எனக்கு எப்பவும் மூக்கால சளி ஒழுகும். அதால என்னை எல்லாரும் அப்படிக் கூப்பிடுகினம். நான் என்ன செய்ய.... அது வருகுது...." என்றபடி மூக்கை உறிஞ்சிக்காட்டினான்.

வெளியுலகின் வஞ்சம் புரியாத அப்பாவியாய் தோன்றினான் அவன் எனக்கு. "அப்ப உம்மட உண்மையான பேரென்ன?" கேட்டேன்.

'என்ர பேர் பாக்கியநாதன்"

'எவ்வளவு நல்ல பேர்' மனத்திற்குள் நினைத்துக் கொண்டேன், சொல்லவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை பால்ரீக்கும் எனக்குமிடையில் ஓர் அன்யோன்யம் மலரத் தொடங்கியிருந்தது. கிட்டத்தட்ட தந்தை மகன் உறவின் வயதிலிருந்த நாமிருவரும் நல்ல கதைகள் பேசும் நண்பர்களாயிருந்தோம்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. வழமையான என் வேலைகளை முடித்து சாய்வு நாற்காலியிலிருந்தபடி புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன். பால்ரீ வந்து எனக்கருகிலிருந்த கட்டில் அமர்ந்திருந்தான், எதுவுமே பேசவில்லை. புத்தகத்தை மூடிவிட்டு அவனை நோட்டம்விட்டேன். அவனின் மேலாடையற்ற கன்னங்கள் அடியால் கன்றியிருந்தது.

"என்னடா என்ன நடந்தது....?" மௌனமாயிருந்தான்.

"கேட்கிறனல்ல... என்ன நடந்தது...?"

"எனக்கு வாழவே பிடிக்கேல்ல சேர். அம்மா செத்த அண்டே என்னையும் சாகடிச்சிருக்கலாம்" கலங்கினான்.

" பாக்கி என்ன சொல்லிறா? ஏன் இப்பிடிப் பேசுற?" அருகே சென்று தோளில் கை வைத்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேரிலதான் சேர் பாக்கியம் இருக்கு, ஆனா வாழுறதில இல்ல" மீண்டும் உடைந்தான்.

"சேருக்கு தெரியும்தான எங்கட அக்கான்ர பிரியன..."

அத்தான் என்று சொல்லியே அறிமுகம் செய்யும் அவன், அன்று முதன்முதலாக அந்த உறவுமுறையை வெறுத்தபடி சொன்னான்.

" அக்கா குழந்தை பெற ஆஸ்பத்திரிக்கு நேற்று போயிட்டா. அந்தாள் வேறை ஒரு பெட்டையக் கூட்டிக் கொண்டு வந்து.... ச்சீ... ச்சீ அதை எப்பிடி என்னால சொல்ல முடியும்?" வெடித்தழுதான்.

எனக்கோ அதிர்ச்சியின் உச்சம்.

மேற்கொண்டு பேச அவனுக்கும் தைரியமில்லை... எனக்கும் கேட்பதற்கு தெம்புமில்லை.

"நீ பேசாமல் என்னோட வந்திரன் பாக்கி..." என்ற என்னை, இடைமறித்தது அவன் பார்வை.

"அக்கா பாவம், நாலைஞ்சு பிள்ளையள் சேர்... நானும் இல்லை யெண்டால் அவள் அந்தரிச்சுப் போயிடுவாள்... அம்மா சாகேக்கை அக்காவ நல்லாப் பாத்துக் கொள்ளச் சொல்லியிட்டுதான் செத்துப் போனவா"

***************

பாக்கியநாதன் வீடு...

பொத்தல் விழுந்த வேலி. அரசாங்கத் திட்ட வீடொன்றின் அரைக் குறைக் கட்டிடம். ஓலைப் பாயில் நீட்டி நிமிர்த்திக் கிடத்தி வைக்கப் பட்டிருந்தான், அவன். நெற்றி நிறைய விபூதியும் நடுவிலே சந்தனப் பொட்டுமாக கிடந்தவனைக் கண்கொண்டு காண மனம் கதறியது. வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சேட்டும் அணிவித்திருந்தார்கள், இரு கால் பெருவிரல்களையும் சிறு துணியொன்றால் கட்டி நெற்றிப்பொட்டில் ஒரு ரூபாய் நாணயக் குற்றி வைக்கப்பட்டிருந்தது. உயிரோடிருந்திருந்தால், கண்டவுடன் 'சேர்' என்றபடி எழுந்திருப்பான் இல்லையா? அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரோடில்லை... மூளையைக் குடைந்தது அவன் நிலை. கைக் குழந்தை யோடு தலைவிரி கோல மாய் அவன் அக்கா தலையிலடித்துக் கதறியழ அவளைச் சூழ்ந்திருந்த பெண்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந் தார்கள்.

“அவனுக்கு நல்லா நீந்தத் தெரியும்.... பிறகெப்பிடி கிணத்துக்க விழுந்து சாக முடியும்? அதுவும் ஆழமேயில்லாத கிணறு...”

“பால் ரீயின்ர பின்பக்க தலையில அடிச்ச கண்டல் காயம் கிடக்கு”

“எனக் கெண் டால் அவன்ர தமக்கை பிரியன்மேல தான் சந்தேகம், அவன் தான் அடிச்சுக் கொண்டு போட்டு கிணத்துக்க போட்டிருக்க வேணும்.”

**அன்று ஞாயிற்றுக் கிழமை. வழமையான என் வேலைகளை முடித்து சாய்வு நாற்காலியிலிருந்தபடி புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன். பால்ரீ வந்து எனக்கருகிலிருந்த கட்டில் அமர்ந்திருந்தான், எதுவுமே பேசவில்லை. புத்தகத்தை மூடிவிட்டு அவனை நோட்டம்விட்டேன். அவனின் மேலாடையற்ற கன்னங்கள் அடியால் கன்றியிருந்தது.**

“பால் ரீ செத்த நேரத்திலயிருந்து அவனக் காணேல்ல... எல்லாம் உந்தக் கசிப்பு செய்யிற வேலை” ஆளாளுக்கு ஆயிரம் வியாக்கியானங்கள் அங்கே பரவிக் கொண்டிருந்தது.

“ சே... என்ன நல்லபெடியன். என்ன வேல சொன்னாலும் செய்வான்” ஊதியமற்று வேலை வாங்கும் சிலரின் பச்சாதாபங்கள்...

அப்போது தள்ளாடியபடி வந்த பால்ரீயின் அத்தானை நோக்கிக் காறி உமிழ்ந்தாள் அவன் மனைவி... பச்சை உடம்புக்காரி... எல்லாவற்றையும் மறந்து தன் உடன் பிறந்தவனுக் காய், கணவனை தூற்றினாள். “நீ தான்ரா என்ர தம்பிய கொண்டனீ....” அவள் கத்தினாள். அவன் அசரவில்லை. வெறியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத் தில் விழுந்துருண்டான்.

பாக்கிய நாத னோடு ஒன்றாகத் திரியும் அவ னின் நாய் 'வெள்ளையன்' அவனருகிலேயே சோகம் நிரம்பக் கிடந்தது.

சூதுவாது தெரியாது தமக்கை யின் நலனே தன்னலமென வாழும் பதின்ம வயதுக்கேயுரிய பக்குவமற்ற அப்பாவி. வெகுளியெனப் பெய ரெத்தவன் தன் தமக்கைக்கு நடக்கும் அநீதிக்கெதிராய் வெகுண்டெழுந்து தன்னுயிரை ஈய்ந்து பிணமாகிக் கிடக்கிறான்.

கூக்குரலிட்டழும் அந்தப் பெண்கள் கூட்டமாய் நானுமிருந்தால் என் சோகத்தை வார்த்தை கொண்டு கொட்டியிருப்பேன். எல்லாவற்றையும் மனதிற்குள் போட்டுக் குமையும் ஆண்வர்க்கத்தைச் சேர்ந்தவனாயிற்றே. கண்ணீரை மனதோடு இளையவிட்டு நிற்க, இறுதி யாத்திரைக்கு தயாராகி வெளியே வருகிறான் பால்ரீ.

"சேர் எங்கட வீட்டுக்கு உங்களக் கூட்டிக் கொண்டு போக எனக்கும் ஆசைதான்... ஆனாலும் அத்தானட்ட கசிப்புக் குடிக்க நிறையப் பேர் வருவினம்... அந்த இடத்தில உங்கள மாதிரி ஆட்களின்ர காலடிபட்டால் அது எனக்குத் தான் பாவம் சேர்..." அவன் ஒருநாள் ஆதங்கமாய் சொன்னது நினைவில் மின்னி மறைந்தது.

இன்று தான் இறந்து என்னைத் தன் வீட்டிற்கு வரவழைத்திருந்தான் அவன், 'நான் தான் பாவம் செய்தனான் பால்ரீ... என்னோடு நேசம் பூண்ட யாருமே என்னோடில்லை நீ உட்பட'

அடக்கமுடியாது குலுங்குகியபடி வெறுமையாய் போகும் பால் ரீயின் தேகம் போல, நானும் வெற்றுயிராய் வெளியேறுகிறேன் அவன் இல்லம் விட்டு.

"சேர் இனி நான் வரமாட்டன்!" வானத்தின் வெண்மேகக் கூட்டங் களிடையே மறைந்து மறைந்து சிரிக்கிறான் அவன்.

*2022*

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி




# தேவாங்கு

கதிரவனின்அகோரக் கதிர்கள் வீசிக் கொண்டிருந்த பகல் பொழுதொன்றில் அவனது வருகையிருந்தது.

தலையைக் குனிந்தபடி வழமையாக அவன் இருக்கும் தாழ்வாரத்தின் திண்ணையிலமர்ந்தவன், என்னை நிமிர்ந்து பார்க்காது, பூமியின் சூடு தாங்காது பிளந்து வெடித்திருந்த சாணி மெழுகிய தரையை அவன் விரல்கள் சமன்படுத்திக் கொண்டிருந்தன.

அடுப்படியில் உலை தகித்துக் கொண்டிருக்க, சட்டி பிடிக்கும் கரித் துணியில் கையைத் துடைத்தபடி எழுந்து தாழ்வாரத்தைத் தாங்கி நிற்கும் பூவரசம் கப்பில் சாய்ந்தபடி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றேன்.

"நான் போகப் போறன், இனி திரும்பி வரமாட்டன்"

நான் எதுவும் கேட்கவில்லை. உற்றுப் பார்த்தேன்.



" ம்.. என்னால உனக்கும் கஸ்டம் தான தங்கம்?" குரல் இறுகிப் போயிருந்தது?

"என்ன கஸ்டம்? கஸ்ட மெண்டாலும் இப்ப எதுக்கு அதெல்லாம்?" எப்போதும் விதண்டாவாதம் பேசும் என் வாய் அன்றும் அவனோடு வாதத்தை உருவாக்கி அவன் மனதில் குமுறிக் கொண்டி ருக்கும் சோகத்தை ஆற்றுப்ப டுத்தவே விளைந்தேன்.

புழுதி படிந்திருந்த அவன் தேகத்தில், மாட்டுக்கு குறியி ழுத்தது போன்று அடித்த தழும் புகள். கருந்தேகமெங்கும் வீங் கியிருந்தது. அவன் அழ வில்லை. இறுகிப் போயிருந் தான். ஒருபோதும் நான் பார்த்திராத அவன் தோற்றம், அன்பையே கண்ணில் சுமக்கும் அந்த விழிகள் என்னைப் பார்க்காது தரைநோக்கியே இருந்தது.

தேவகாந்தன்....

சிறுவயது முதல் என் பிரியமான தோழன், அவனை எல்லோரும் தேவாங்கு என்றே பட்டம் தெளிப்பர்.

அன்றொருநாள் வீங்கிப் புடைத்திருந்த அவன் காற்சட்டைப் பையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈச்சம்பழத்தின் மணம் மூக்கை சுண்டியிழுத்தது. ஆசையாக அவனிடம் கேட்டேன், "எனக்கும் தாடா"

"போடி உனக்குத் தரமாட்டன்" பழிப்பு காட்டியபடி ஓடினான்.

நானும் கோபத்தில் "தேவாங்கு" என்று கத்தினேன். அவன் முகம் கோபத்தை விட, அதிர்வையே வெளிக்காட்டி நின்றது. எதுவும் சொல்லாது சென்றுவிட்டவன், நானாக வலியச் சென்று பேசும் வரை என்னைப் பார்க்கவோ பேசவோ இல்லை.

"நீயும் என்னை அப்பிடிச் சொல்லியிட்டியே தங்கம்...."

அவன் எங்கள் வீட்டிலுள்ளவர்களைப் போல "தங்கம்" என்றே என்னை அழைப்பான்.

"மன்னிச்சுக் கொள்ளடா... இனி அப்பிடிச் செய்யமாட்டன்" என்றதும், "சரி விடு...." எனப் பெரிய மனுசனாக நடந்து கொண்டான்.

எதிர்ப்பால் கவர்ச்சியற்ற சிறுபராயம் முதல் கவர்ந்திழுக்கும் கட்டிளைமைப் பருவம் வரை நான் அவனுக்கு நண்பி, அவன் எனக்கு நண்பனே.

பனையோலை கிழித்து மோதிரம் செய்வான், குண்டுமணி மாலை கட்டி போடச் சொல்வான்.

"நீ வளந்தாப் பிறகு உனக்கு நான் உழைச்சுச் சீதனம் தருவன் தங்கம்" என்பான். எங்கள் குடும்பத்தில் ஐந்தும் பெண்பிள்ளைகளென்பதால் இந்த அக்கறையோ என நான் நினைப்பேன்.

ஒரு நாள் அரக்கப் பரக்க ஓடிவந்தவன், நானிருந்த தென்னோலையால் சுற்றி அடைக்கப்பட்ட சாய்ப்புக்கருகில் வந்து, பொட்டல் பிரித்து தலை நீட்டி, "நீ பெரிய மனுசி ஆகியிட்டியாமே.... உன்னப் போய் பார்க்க வேண்டாமெண்டு அம்மா சொல்லுறா, உண்மையாடி? இனி நீ என்னோட பேசமாட்டியா?" ஏக்கத்தோடு கேட்டுவிட்டு அமைதியானவன், நான் தனிய இருந்து பொழுதுபோக்குவதற்காக, கொக்கான் வெட்டக் கல்லும், தாயம் விளையாடப் புளியங்கொட்டையும் பொறுக்கி வந்து தந்துவிட்டுப் போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கானதில் எனக்கும் சிறு துளி தந்தே உண்ணும் பாசக்காரன் அவன். பள்ளிக்கூடத்தில எங்களோட கூடப் படிக்கும் ராசுவை ஒருநாள் அவன் அடி வெளுத்துக் கொண்டிருந்தான். எங்கள் வகுப்பு பெடியளும் பெட்டையளும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க, நண்பி ஒருத்திதான் ஓடிவந்து, "உன்னால தேவகாந்தன் ராசுவைப் போட்டு அடிக்கிறான். நீ அன்னநடை நடந்து கொண்டு வாறாய்" என்றாள் ஆத்திரமாக.

"ஏன்டா அவனை அடிக்கிறாய்... விடடா"

எதுவும் பேசாது முறைத்தபடி நடந்தவன், "அவன் என்ன சொன்னவன் தெரியுமோ?"

"அவன் என்ன சொன்னாலும் நீ இப்பிடித்தான் முரட்டுத்தனமா நடப்பியா?" முறைத்தபடி கேட்டேன்.

"ராசு என்னையும் உன்னையும் சேர்த்து வைச்சுக் கதைக்கிறான், அண்டைக்கு நீ எங்கட ரண்டு பேரிட பேரும் கக்கூசு சிவரில எழுதினது ஆரெண்டு நினைக்கிறா? அவன்தான். எனக்கு வந்த கோவத்துக்கு அவன்ர தலைமண்டைய உடைச்சிருப்பன் நீ தடுத்திட்டா" என்றான் ஆத்திரமாக.

அவனது ஆக்ரோசம் சரியென்றே எனக்குப்பட்டாலும், அவனது முரட்டுத்தனமான கோபத்தை நான் அடியோடு வெறுத்தேன்.

எங்கட ரண்டு பேரிட வீடுகளும் பக்கத்து வீடுகள், ரண்டு குடும்பமும் தூரத்து உறவுகள் வேறு...

அவனின் தந்தை கண்டிப்பானவர். மூன்று ஆண் சகோதரர்களையும் இரு பெண் சகோதரர்களையும் கொண்ட குடும்பத்தில் இவன்தான் கடைக்குட்டி, கூடவே குழப்படிக்காரன் எனப் பெயரெடுத்தவன்.. என்ன தவறு நடந்தாலும் இவன் தலையே உருளும். இவனுக்கான தந்தையின் அடியை அவன் அம்மாதான் இடையில் சென்று வாங்குவார்.

அன்றும் அப்படித்தான் மூத்த தமையனார் வைத்த காசைக் காணவில்லையென, இவன்மீது பழி விழ, இவனோதான்எடுக்கவில்லையென வாதாடினான். இருந்தும் நம்புவதற்கு அவன் தாயைத் தவிர யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வீட்டிலில்லை. காசைக் களவாடி கிளிக்குஞ்சு வாங்கியதாக அவனில் குற்றம் சுமத்தப்பட, தகப்பனார் மாட்டுக்கு அடிக்கும் தடி கொண்டு விளாசிவிட்டார். அதன் குறிகளே அவன் தேகத்தில்.

"நான் களவெடுப்பன் எண்டு நீ நினைக்கிறியோ தங்கம்?" அதுவரை நிலம் நோக்கிய அவன் விழிகள் என்னை நோக்கியது, அதில் நீயாவது எனை நம்புவாயா? எனும் கெஞ்சல் தொக்கி நின்றது.

"விசரா உனக்கு? நான் ஏனடா உன்னை அப்படி நினைக்கிறன்? நீ வீட்டுக்குப் போ...." ஒன்றும் சொல்லாது "நான் போறன்" என அவன் எழுந்தான்.

ஏதோவொன்றை என்னிடம் சொல்லவந்தும், சொல்லாது அவன் போய்விட்டான். போனவனைக் காணவில்லையாம்... தேடினார்கள். அவனில்லை... எல்லோரும் கண்ணீர் சிந்தி அவனது காணாமல் போதலையிட்டு அழ, பாரம் நிரம்பிய மனதோடு என் காலங்களும் நகர்ந்தது.

நாட்கள் கடந்து வருடங்கள் ஓடியது.

முகமாலையில் இயக்கத்தோடு கண்டதாக யாரோ சொன்னார்கள், அவனைக் காணவில்லை.... அவனைக் காணாததால் தாயாரின் திடீர் சுகவீனத்தைக் காரணம் சொல்லி அவர்கள் தேடாத இடமேயில்லை. யாருமே அவன் எங்கிருக்கிறான் என்பதைச் சொல்ல மறுத்துவிட்டனர். எல்லாம் முடிந்து பூசாச் சிறையில் கண்டதாகவும் சிலர் சொன்னார்கள்.... அவனைக் காணவில்லை....

எங்கே போகிறேன் என அன்று அவனும் சொல்லவில்லை.... நான் கேட்கவுமில்லை. என்னிடமாவது சொல்லியிருக்கலாம் தான் எங்கே போகிறேன் என...

தேவாங்கு!

*2018*

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# அவள் ஒரு தொடர்கதை...

அவள் கொஞ்சம் வித்தியாசமானவள். பெயரும் கூட. இரண்டு ஆண்டுகள் வகுப் பேறாமல் பெயிலாகி எங்கட வகுப்பில தான் அவள் இருந்தாள். அமைதியானவள் தான் ஆனால், சண்டையெண்டு வந்தால் அவளை அடிச்சிக் கொள்ள ஆளே கிடையாது.

சாந்தமலர். பெயருக்கேற்றாற் போல சாந்த மானவள் என்று யாராவது நினைத்தால், அது நினைக்கிறவர்களின் தவறு.

எங்கள் நட்பு வட்டத்தில் தான் அவளும் இருந்தாள். அதனால் எங்களோடு கொஞ்சம் மற்றவர்கள் மரியாதையாகப் புழங்குவார்கள். இதில் எங்களுக்கெல்லாம் பெருமைதான். ஒருநாள் சாந்தமலர் பள்ளிக்கூட இடைவேளை நேரம் ஆயிரம் ரூபாத்தாளொன்றை எங்களிடம் காட்டினாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

"இஞ்ச குடு பாப்பம்" அனுதான் வாங்கிப் பார்த்தாள்

"ஓமடி ஆயிரம் ரூபாத் தாள்தான். எங்காலையடி இது? உங்கட வீட்டில தேடமாட்டினமோடி?" நான் ஆச்சரியமாக வாயப் பிளந்தேன்.

"அவளுக்கு இதெல்லாம் பெரிசில்ல... கடை வைச்சிருக்கினம். அதுக்குள்ளயிருந்து எடுத்து வந்திருப்பாள்" மோகனா, சாந்தமலருக்கு கொஞ்சம் பக்கத்தில் நெருங்கி அமர்ந்தாள்.

சாந்தமலருக்குப் பெருமை பிடிபடவில்லை.

"இண்டைக்கு, கன்ரீனில உங்கள் எல்லாருக்கும் நான் வடை வேண்டித் தாறன்" எங்கள் கன்ரீன் உழுந்து வடையெண்டால் அப்பிடி ஒரு ருசி. நினைத்தால் உடனே வாயூறும். உடனுக்குடன் எண்ணெயில போட்டு எடுத்துத் தருவார் மாலினி அக்கா. உழுந்த நைசா அரைச்சு, அதோடு பச்சை மிளகாய், சின்ன வெங்காயம் குறுணி குறுணியாக வெட்டி, பெருஞ் சீரகம், கறிவேப்பிலை மிள குத் தூளெல்லாம் போட்டு குழைத்து, சின்னச் சின்ன உருண் டையாய் கையில் தட்டி, அதுக்கு நடுவில் ஆட்காட்டி விரலால் ஓட்டை போட்டு எண்ணையில் போட்டுப் பொரித்து எடுத்து வைத்தால், சும்மா பள்ளிக் கூடம் முழுவதும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வடையின் மணம்தான். வெளியில் மொறுமொறு எண்டாலும், வடையப் பிய்க் கும் போது உள்ளே பஞ்சு போல இருக்கும்.

ஒரு நாள் அம்மா சுட்டுத் தந்த வடையக் கையில் வைத்துக் கொண்டு நான் மாலினி அக்காவின் வடையப் புகழ்ந்ததுக்கு, அம்மா கோவமாகி ரண்டு குட்டு மண்டையில தந்திட்டு "உங்கட மாலினி கொக்கா கொஞ்சமா உழுந்தப் போட்டு அதோட பழஞ்சோத்தையும் சேத்து பிணைஞ்சுதான் வடை சுடுறா. உழுந்து விக்கிற விலையில இவாக்கு தனி உழுந்தில வடை சுட்டுக் குடுக்கினமாம்" அம்மா தந்த குட்டை விட, மாலினி அக்கான்ர வடைய அம்மா குறையாப் பேசிப் போட்டா எண்ட கோவம் அண்டைக்கு நாள் முழுக்க இருந்தது எனக்கு.

சாந்தமலர் வடை வாங்கித் தாறன் எண்டு சொன்ன நேரத்திலயிருந்து எங்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. "வாடி மாலினி அக்கா வடை கொண்டுவந்திருப்பா.... நான் போய் பாத்திட்டு வந்து உனக்குச் சொல்லவே?" மோகனாதான் முதல் ஓடிப்போனாள். அதன்பிறகு ஒரு பேப்பர் பையில் மோகனாவும் சாந்தமலரும் வடையோடு வந்தார்கள். எங்களுக்கெல்லாம் சரியான கொண்டாட்டம்.

"அங்க பாரடி அந்த வாசுகிப் பாம்பு எங்களத்தான் பார்க்கிறாள்." எங்களையே சுத்திச் சுத்திப் பார்த்துக் கொண்டு போன வாசுகியக் கண்ட அனு சொல்ல, நானும் திரும்பிப் பார்த்தேன்.

"வாசுகிப் பாம்பு என்றுதான் நாங்கள் வாசுகிக்குப் பேர் வைச்சிருந்தோம். எங்களுக்கும் வாசுகியின் குரூப்புக்கும் எட்டாப் பொருத்தம். எப்பவுமே சண்டைக்குத் தயார் நிலையில்தான் இரண்டு பக்கமும் நிற்கும். ஒருநாள் சமயப் பாடம் படிப்பிக்கும்போது கண்ணகி ரீச்சர், தேவர்களும் அசுரர்களும் அமிர்தம் கடைய பர்வத மலையை மத்தாகவும், வாசுகிப் பாம்பைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடைந்ததாகச் சொல்லி, பாடம் நடக்கின்றபோது, திடீரென சாந்தமலர் "வாசுகிப் பாம்பெண்டால், எங்கட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசுகியோ ரீச்சர்" என்றாள். ரீச்சருக்கு கோபத்தில், சாந்தமலரின் சட்டையின் பின்பக்கம் பச்சைப் பூவரசம் தடியின் சாயம் குறிகுறியாக இருந்தது வேறு கதை. ஆனால் அப்போதிலிருந்து எங்களுக்கெல்லாம் வாசுகி பாற்கடலைக் கடைஞ்ச பாம்பு ஆனாள்.

"ஓமடி அவள் பார்த்துக் கொண்டு சுத்திறாள். சிலநேரம் சாந்தமலர் வீட்ட போய்ச் சொல்லிக் குடுப்பாளோ தெரியாது. எதுக்கும் சாந்தம் நீ கொஞ்சம் பார்த்து போடி" மோகனாதான் சொன்னாள்.

"இந்த வாசுகிப் பாம்பு ஏதும் வாலாட்டுமெண்டுதான் நான் நினைக்கிறன்.... அப்பிடி வாலாட்டித்தான் பாக்கட்டன். அதுக்குப் பிற குதான் நான் ஆரெண்டு அவளுக்குத் தெரியும்." வீராவேசமாகச் சொன்ன சாந்தமலர், அதன்பிறகு இரண்டு நாட்கள் பள்ளிக்கூடப் பக்கமே இல்லை.

அன்று சனிக்கிழமை. எங்களுக்கெல்லாம் கொண்டாட்டம் தொடங்கும் நாள். காலைச் சாப்பாட்டோட வெளியில் வந்தால், பின்பும் மதியச் சாப்பாட்டுக்கே வீட்டு நினைவே வரும். விளையாட்டுக்குப் பஞ்சமிருக்காது.

அதுவும் புளிச்சல் விளையாட்டென்றால் அவ்வளவு சந்தோசம் எங்களுக்கு. யார் மேலாயவது இருக்கிற கோபத்தையெல்லாம் ஒன்று திரட்டி புளிச்சல் பந்தால் அடிக்கிற சந்தோசமிருக்கே. இரண்டு நாட்டுக்கான போரில் வெற்றி பெற்ற கதைதான்.

சாந்தமலரின் கைக்கு மட்டும் புளிச்சல் பந்து போகக்கூடாதெண்டு எல்லோரும் எல்லை வைரவருக்கு நேத்தி வைப்போம். சாந்தமலர் நல்ல உயரமாயிருப்பாள். அவளின் கையால் விழும் புளிச்சல் அடி, சிலவேளை அடுத்த கிழமை வரைக்கும் புளிச்சல் பந்தைவிடப் பெரிதாக வீங்கியி ருக்கும்.... அப்பிடியொரு அடி...

"நித்தி, வாறியோடி நான் குளத்துக்கு குளிக்கப் போறன்" மோகனாதான் வேலிப்பொட்டுக்கால் தலை நீட்டிக் கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நித்தி எங்கயடி போற? தோட்டத்துக்க நிக்கிற கொப்பாட்ட சாப்பாட்டக் கொண்டு போய்க் குடு"

"இந்த மனிசி எப்பவும் இப்பிடித்தான். நான் எங்க போக வெளிக் கிட்டாலும் உடன ஒரு வேலைய சொல்லுவா பார்." வாய்க்குள் முணு முணுத்துக் கொண்டு, அடுப்படி வாசலுக்கு ஓடுகிறேன் நான்.

"இந்தா எங்க வேணுமெண்டாலும் போ. விடிய வெள்ளென ஒரு சில்வர் தேத்தண்ணியோட வெளிக்கிட்ட மனுசன் பசியோட கிடக்கப் போகுது. அந்தாளின்ர கஸ்டத்த எப்பத்தான் புரிஞ்சு கொள்ளப் போறியளோ?"

"உனக்காக இல்ல. அப்பாவுக்காகத்தான் இதைச் செய்யிறன்" ஏதோ பெருந்தன்மையாக நடந்து கொள்ளும் எண்ணம் எனக்கு. வெளியில் வரும்போது மோகனாவோடு அனுவும் நின்றாள்.

"ஏன்டீ, சாந்தமலர் வரயில்லயோடி? அவளுக்கும் எனக்கும் நீச்சல் போட்டியொண்டு இருக்கு. போன கிழம என்ன எப்பிடி தோக்கடிச்சவள்? இண்டைக்கு அவள வெல்லாமல் விடமாட்டன்." சவாலோடு நான் சொல்ல, "நீ எப்ப அவள வெண்டிருக்கிற இண்டைக்கு வெல்ல" என்ற மோகனாவை முறைத்தபடி "இண்டைக்கு அவள வெல்ல வேணும்.' என்று சபதத்தோடு அப்பாவைத் தேடிக் ஓடினேன் நான்.

"அங்கபார் சாந்தமலர் ஓடி வாறளடி" தன் சோடி வந்த குதூகலத்தோடு மோகனா துள்ளிக் குதித்தாள்.

"ஏன்டீ ரண்டு நாளா பள்ளிக்கூடத்துக்கு வரயில்ல, அந்த வாசுகிப் பாம்பு எங்கள எப்பிடியெல்லாம் நக்கலடிச்சவள் தெரியுமோ?" அனு சொல்ல, சாந்தமலர் அமைதியாகவே வந்தாள்.

எப்பவும், என்னைவிட்டா ஆருமில்ல.என்ற கர்வத்தோடு நடக்கும் சாந்தமலர் அன்று சோர்ந்து போயிருந்தாள். யாரோடும் பெரிதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையில்லை. நாங்கள் மூன்றுபேரும் எதுவும் பேசாமல் குளத்துக்கு வந்து சேர்ந்தோம்.

நாங்கள் வரும் முன்பே குளம் பெடியள் பெட்டைகளால் நிரம்பிக் கலங்கிப் போய் இருந்தது. சில வயதானவர்களும் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தார்கள். ஆய்கூய் எனும் சத்தத்தோடு பெடியள் பெட்டைகளெல்லாம் குளத்தைக் கலக்கிக் கொண்டிருக்க, "உந்தக் குறுக்கால போனது களோட நிம்மதியாக் குளிக்கக் கூட முடியேல்ல. சேத்துக்க புரளுற எருமைமாடுகள போல குளத்துக்க புரளுதுகள்" வெளியில் ஏறிவந்து காறித்துப்பிக் கொண்டு மாந்தோட்டக் காவல் கிழவன் போனார்.

**அதன் பிறகு சாந்தமலர் வாசுகியின் குளச்சண்டைதான் பாடசாலையில் பிரபலமாயிருந்தது. பெடியங்கள் கூட சாந்தமலருக்கு பயப்பிடும் அளவுக்கு நிலமை.**

**இந்த விடயங்கள் எங்கட வீடுகளுக்கும் தெரியவர, சாந்தமலரோடான எங்கள் நட்பிற்கு தடைவிதிக்கப்பட்டும், மீறி எங்கள் நட்பு தொடர்ந்தது வேறு கதை.**

**இடப்பெயர்வு, சண்டை எல்லாம் சேர்ந்து எங்களை ஆளுக்கொரு திசைப் பக்கமாகக் கலைக்க, சாந்தமலர் குடும்பம் வன்னிக்கு இடம்பெயர்ந்தாயிற்று. வயதுகள் கூடக்கூட இருந்த குறுகுறுப் புத்தனமெல்லாம் குறைந்து படிப்போடு நானும் அனுவும் தொடர, படிப்பைவிட்டு மோகனா பதினெட்டு வயதில் அவளின் மாமன் மகனைத் திருமணம் செய்திருந்தாள்.**

"சாந்தம் வாவன்ரீ இண்டைக்கும் இந்தக் கரையில இருந்து அந்தக் கரைக்கு நீந்துவம்" அவளை நான் வெல்ல வேணுமென்றஎண்ணம் உந்தித்தள்ள நான்தான் கேட்டேன்.

"இல்லையடி நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரயில்ல நீ போய்க் குளி" குளத்துக் கட்டில் இருந்தபடி சாந்தம் சொன்னாள்.

ஆனால் ஒரு நாளும் இல்லாத அவளின் அமைதி மட்டும் வித்தியாசமாகவே இருந்தது. எப்போதும் அவள் அப்படியிருந்து நான் கண்டதேயில்லை. நான் எதுவும் பேசாது குளத்தில் இறங்கிவிட்டேன்.

"ஐயோ என்னக் காப்பாத்துங்கோ.... ஐயோ அம்மா... சாந்தம் என்ன விடடீ...."

"எடியே சாந்தம் அவள விடடீ.... அவள் பாவம்... விடடீ" நான் கத்துவது அவள் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

வாசுகி கத்தக் கத்த சாந்தம் அவளைத் தண்ணீருக்குள் தாழ்த்தி... தாழ்த்தி அடிக்கத் தொடங்கியிருந்தாள். குளமே அமைதியாகி வேடிக்கைப் பார்க்க, நானும் மோகனாவும் அனுவும் திகைச்சுப் போய் நின்றோம்.

காளி கோயிலில் நாக்கைத் தொங்கப் போட்டபடி தலையை விரித்து நிற்கும் பத்திரகாளிச் சிலை மாதிரி சாந்தம் தெரிந்தாள். அவளின் கண்ணிரண்டும் இரத்த சிவப்பாகிக் கிடந்தது.

"பாவம்டி வாசுகி..." அனு நடுங்கத் தொடங்க.... எனக்கு பயத்தில் குளத்துக்குள்ளேயே மூத்திரம் போனது.

விட்டால் போதுமென வாசுகி வெளியில் ஓடியதைப் பார்த்து சாந்தம் பல்லு முழுவதும் வெளியில் தெரிய சிரிக்கிறாள்.

"வாவன் நித்தி, இப்ப நீந்துவம்"

எனக்குத் தெரியாமலே என் தலை இரண்டு பக்கமும் ஆடி மறுதலித்து நின்றது.

அதன் பிறகு சாந்தமலர் வாசுகியின் குளச்சண்டைதான் பாடசாலையில் பிரபலமாயிருந்தது. பெடியங்கள் கூட சாந்தமலருக்கு பயப்பிடும் அளவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலமை.

இந்த விடயங்கள் எங்கட வீடுகளுக்கும் தெரியவர, சாந்தமலரோடான எங்கள் நட்பிற்கு தடைவிதிக்கப்பட்டும், மீறி எங்கள் நட்பு தொடர்ந்தது வேறு கதை.

இடப்பெயர்வு, சண்டை எல்லாம் சேர்ந்து எங்களை ஆளுக்கொரு திசைப் பக்கமாகக் கலைக்க, சாந்தமலர் குடும்பம் வன்னிக்கு இடம்பெயர்ந்தாயிற்று. வயதுகள் கூடக்கூட இருந்த குறுகுறுப் புத்தனமெல்லாம் குறைந்து படிப்போடு நானும் அனுவும் தொடர, படிப்பைவிட்டு மோகனா பதினெட்டு வயதில் அவளின் மாமன் மகனைத் திருமணம் செய்திருந்தாள்.

||||

"ரீச்சர் சோபனா என்னை அடிச்சிட்டாள்" புதிதாக வேறு பாடசாலை யொன்றிற்கு மாற்றம் கிடைத்து அன்றுதான் முதல் முதலாக வகுப்புக்குள் வந்திருக்க, அழுதுகொண்டு ஒரு பிள்ளை ஓடி வருகிறது.

"ஆர் சோபனா? ஏன் அடிச்சவா?"

"நான்தான் சோபனா" திமிராக நிமிந்து நின்ற சோபனாவைக் கூர்ந்து பாக்கிறேன். தோற்றம். அவளை முன்பே எங்கையோ பார்த்த ஞாபகத்தைக் கிளறி விட்டிருந்தது.

"சரி நீரேன், பிருந்தாவை அடிச்சனீர்?"

"என்னை எந்த நேரமும் நெட்டைக் கொக்கு எண்டு பட்டந்தெளிக்கிறா ரீச்சர். அதுதான் அடிச்சனான்" எந்தக் குற்றவுணர்வும் அவளில் இல்லை. கண்கள் பளிச்சென்று மின்னியது.

"இனி என்ர வகுப்பில ஆருக்கும் ஆரும் அடிக்கக் கூடாது. அப்பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறினால், அதிபரின்ர அறைக்கு அனுப்புவன்" சொன்னபடியே நான் பாடத்தை நடத்தத்தொடங்க,

"ரீச்சர் உந்தப் பிள்ளையின்ர அம்மா சீட்டுச் சாந்தமலர். ஏது மொண் டெண்டாலும் வரிஞ்சு கட்டிக்கொண்டு பிரச்சினைக்கு வருவா... எதுக்கும் கவனமாவே டீல் பண்ணுங்கோ" பக்கத்து வகுப்பு ஆசிரியர் ரகசியமாகச் சொல்லிவிட்டு திரும்பினார்.

சாந்தமலர்? அவளாயிருப்பாளோ? இடப்பெயர்வின் பின் சாந்தமலர் குடும்பம் இப்போது நான் படிப்பிக்கும் இடத்தில்தான் இருப்பதாகவும், அவள் பெரிய சீட்டுத் தாச்சியாகப் பெயர் பெற்றிருக்கிறாள் எனவும் மோகனா சொல்லக் கேட்டிருக்கிறேன்.

111

நெடிதுயர்ந்த தோற்றம்.... வாய் நிறைய வெற்றிலை.... அள்ளி உச்சியில் போட்ட குடுமி... நீளமான சட்டை... அடாவடியான தோற்றத்தோடு நின்றவள் "என்ன ரீச்சர் என்னைத் தெரியுமோ?" வெற்றிலைக் காவி படிந்த பற்களைக் காட்டிச் சிரிக்கிறாள் சாந்தமலர்.

"நீ சாந்தமலர் தான.என் ஆச்சரியத்தில் விழிகள் விரிய"

"இது என்ர இடந்தான்... ஏதும் உதவி எண்டாலும் என்னட்ட கேள் பயப்பிடாமல். சீட்டு சாந்தம் எண்டு சொன்னால் ஆரும் சொல்லுவினம். நேற்று நீ வரக்கை நான் கண்டனான். நீதானெண்டு அடையாளம் கண்டு பிடிச்சிட்டன். என்ர மோன்ர வகுப்பு ரீச்சரட்ட கேட்டுத்தான் நீதானெண்டு உறுதிப்படுத்தினான். அதுதான் உன்னப் பாக்கலாமெண்டு வந்தன். இங்க அவள் கூறக் கூற... எல்லாம் மாறிக் கொண்டிருக்க, சாந்தமலர் மாறாது தொடர்கதையாகிக் கொண்டிருக்கிறாளே எனும் ஒரு வலி என் மனதை அசைக்கத் தொடங்கியது.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# ஒரு பகல ஓர் இரவு

ஊர் உறங்கத் தயாராகிக் கொண்டிருந்தது. இரவின் ஏகாந்தம் அந்நாளின் அத்தனை இயங்குதலையும் நிறுத்தி, ஒரு புது நாளுக்கான ஆயத்தத்துடன் இருட்டைப் போர்த்திக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தது.

எங்கோ இருந்து திடீரென எழும்பிய அலறல் சத்தத்தில் என் உறக்கம் கலைகிறது. "ஐயோ என்னை அடிக்கிறான்... யாராவது என்னைக் காப்பத்துங்கோ...." என ஒரு பெண்ணின் குரலும், "போடி வெளிய....." என ஒரு ஆணின் குரலுமாக எங்கள் வீட்டிலிருந்து ஒரு நான்கு வீடுகள் தள்ளி சத்தம் வந்து கொண்டிருந்தது. இது வழமையாகவே கேட்கும் சத்தம் தான். இந்தச் சத்தத்தாலோ அல்லது அலறலாலோ யாரும் உறக்கம் கலைந்து எழுந்ததாக நான் நினைக்கவில்லை. ஆனாலும் என் தூக்கம் தொலைவில் என்பதை என் மனம் அறியாமலில்லை. எங்கள் வீட்டிலும் எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்திலிருப்பதாய் ஓர் உணர்வு. அருகில் படுத்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையை மெதுவாக எழுப்புகிறேன்.

"மகா எழும்பு ராசாத்தியக்கா குளறிக் கேட்குதடி...... எழும்பு மகா"

அவளோ ஏதோ மகிழ்ச்சியான கனவு கண்டு கொண்டிருந்திருக்கிறாள் போல, நான் எழுப்பவும் எரிச்சல்பட்டுக் கொண்டு, "என்னக்கா..." என்றபடி எழுந்தாள்.

"ராசாத்தியக்கா போல கத்துறாடீ, அந்த மடத்தல் மனிசன் அடிக்கிறான் போல?" என்றேன்.

**ராசாத்தியாக்கவின் கணவன் அவளுக்கு எதிர்மாறான குணம். வேலையெதற்கும் போகாது தண்டமாக வீட்டையும் ஊரையும் சுற்றும் மனிதன். அவள் வேலைக்கு போய்வந்தவுடன் சம்பளக்காசைக் கேட்டுச் சண்டை போடுவார். காசைக் கொடுத்தால் குடித்துவிட்டு வந்தடிப்பார். கொடுக்காவிட்டாலும் அடிதான். ஆனாலும் அவரைச் சமாளித்துக் கொண்டு குடும்பம் நடத்துவதென்பது எவ்வளவு பெரிய காரியம்.!!!!**

தங்கை காதைக் கொடுத்து கேட்டுவிட்டு, "அது புருசன் பொஞ்சாதி சண்டை... எல்லாம் வழமையா நடக்கிறதுதான, நீ பேசாமல் படு" என்றபடி மறுபக்கம் திரும்பிப்படுத்துக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் சத்தம் கேட்டபடியேயிருந்தது. பாத்திரங்கள் எல்லாம் வீதியில் வந்து விழுந்ததைப் போல இருந்தது. பின்பு எல்லாம் அடங்கி மீண்டும் அமைதி கொண்டது இரவு.

ஆனால் என் உறக்கம் மட்டும் கலைந்து மனம் கல்லெறிந்த குளமாகக் கலங்கிக் கொண்டிருந்தது. பரிதாபம் நெஞ்சை அடைக்க அங்குமிங்குமாக உருண்டபடி கிடந்தேன். ஈயத்தைக் காய்ச்சி செவிகளில் ஊற்றினால் எப்படியிருக்கும், அப்படித்தான் அவளது அலறல் என் காதுகளில் ஊற்றப்பட்ட ஈயமாக எனக்கு வலித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது.

ராசாத்தியக்கா, கெண்டைக்கால்வரை நீண்டிருக்கும் கருகருவென்ற முடியும், எந்நேரமும் வெற்றிலை போட்டுச் சிவந்த வாயும் கண்ணெதிரே வந்து நின்றது.



பெண்ணென்றாலும் நல்ல உழைப்பாளி, ஒரு நாளும் வீட்டிலிருப்பதில்லை. வெங்காயம் நடுகை, களைப் புல்லுப் பிடுங்கல், அருவி வெட்டுதல் என அந்தந்தக் காலங்களுக்குரிய கூலி வேலைகளுக்குச் செல்வாள். வேலை இல்லாத நாட்களில், ஊரிலுள்ள பெண்களோடு காட்டுக்குச் சென்று விறகு வெட்டித் தலையில் சுமந்து கொண்டுவந்து விற்பார். அவள் தன் சிரசில் சுமக்கும் விறகின் நிறையை நிறுத்தால் கிட்டத்தட்ட பதினைந்திருபது கிலோவைத் தாண்டும் என்பது என் கணிப்பு. நல்ல கலகலப்பாகப் பேசக் கூடியவள். மற்றவர்களை நையாண்டி செய்து பேசுவதில் வல்லவள். அவளிருக்குமிடத்தில் சிரிப்புக்குப் பஞ்சமிருக்காது. அம்மாவின் நல்ல தோழி என்பதால் எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்துபோகும் ராசாத்தியக்காவைக் கண்டால் எங்களுக்குக் கொண்டாட்டம்தான். அனேகமாக பகலில் கூலி வேலைக்குச் செல்லும் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையில் கதைப்பதற்காக எங்கள் வீட்டுக்குத்தான் வருவாள். ராசாத்தியக்கா வந்தவுடன் எங் கள் படிப்புப் புத்தகம் மூடப்பட்டுவிடும் என்பது அம்மாவுக்குத் தெரியும்.

"இதைப் பார் நித்தி, உனக்கும் என்னப் போல நல்ல நீளமா உன்ர கொம்மா (அம்மா) தலைமயிர் வளக்குறாள், நாளைக்கு உன்ர புருசனுக்கும் உனக்கும் சண்டை வந்தால், அவன் உன்ர தலைமுடியிலதான் பிடிச்சு அடிப்பான்" கேலியும் கிண்டலுமாக என்னைப் பார்த்துச் சொல்லும் அவளின் கதை கேட்டு நான் அழுததும் உண்டு. பின்பு அவளே சமதானமும் செய்வாள். அவளுக்கும் எங்களுக்குமான உறவின் நெருக்கம் இப்படிப் பற்பல...

ராசாத்தியக்காவுக்குப் பிள்ளைகள் இல்லை. அவளது கணவனுட்பட ஏனைய சிலரும் அவளை மலடி எனப் பேசுவதை என் காதுகளால் கேட்டிருக்கிறேன். அவளுக்கும் பிள்ளைகள் இருந்தால் தன் வேதனைகளைச் சுமைகளை அவர்களோடு பகிர்ந்திருப்பாள் தானே. ஆனாலும் அவள் அதைப் பெரிதாக எடுப்பதில்லை என்றாலும், அவளுக்கான வேதனைகள் ஆயிரமாயிரம் உண்டென்பதை அவளது பேச்சுக்களினூடு நான் அறிந்து கொண்டேன்.

"ஏன் உப்பிடி உவரோட இருந்து கஸ்டப்படுறியள், பேசாமல் ஆள வெளியேத்தி விட்டிட்டு உங்கட அம்மா சகோதரங்களோட நீங்கள் இருங்கோவன் ராசாத்தியக்கா... ஒருநாள் மனதிலிருந்ததை நான் கொட்டிவிட்டேன்.

"அது அப்பிடியில்லையம்மா... இது நான் தெரிஞ்செடுத்த வாழ்க்கை நித்தி, அதுக்காக நான் கஷ்டப்பட வேணுமெண்டில்லதான், எப்பவோ நான் அவனைக் கலைச்சு விட்டிருப்பன். ஆனாலும் பிள்ளைகுட்டியெண்டு ஏதும் எனக்கில்லை. எனக்கிருக்கிற ஒரே உறவெண்டாலும் அது அவன் தான். நாளைக்குப் பின்ன அவன் செத்துப் போனாலும் எல்லாருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரமாத்தான் நான் இருக்கவேணும். என்னட்ட என்ன இருக்கெண்டுதான் சொந்தம் பந்தம் பாக்குமே தவிர, என்னை ஒரு மனிசியா ஆரும் நினைக்கமாட்டினம். இதுதான் உண்மை. ஒரு பகலும் ஒரு இரவும் போலதான் இந்த மனிசற்ற வாழ்க்கையும்... இது என்னோடையே முடிஞ்சு போகட்டும்."

உலகத்தின் ஒட்டுமொத்த விரக்தியும் அவளது பதிலில் வந்து குவிந்திருந்ததை என்னால் உணரமுடிந்தது.

ராசாத்தியாக்கவின் கணவன் அவளுக்கு எதிர்மாறான குணம். வேலையெதற்கும் போகாது தண்டமாக வீட்டையும் ஊரையும் சுற்றும் மனிதன். அவள் வேலைக்கு போய்வந்தவுடன் சம்பளக்காசைக் கேட்டுச் சண்டை போடுவார். காசைக் கொடுத்தால் குடித்துவிட்டு வந்தடிப்பார். கொடுக்காவிட்டாலும் அடிதான். ஆனாலும் அவரைச் சமாளித்துக் கொண்டு குடும்பம் நடத்துவதென்பது எவ்வளவு பெரிய காரியம்.!!!!

ஏனோ உறக்கம் என் கண்களை விட்டு வெகுதூரம் போய்விட்டதாக ஒரு உணர்வு. அன்றுதான் எனக்கான திருமணப் பேச்சில் என்னைப் பெண் பார்க்க வந்து சென்றிருந்தார்கள். மனதை மகிழ்ச்சியிலாழ்த்த வேண்டிய இராப்பொழுதது. திருமண வாழ்க்கையே இப்படித்தான் இருக்குமோ என்னும் பய உணர்வை விதைப்பதைப் போல "என்னைக் காப்பாத்துங்கோ" எனும் அலறல் சந்தோசத்தை மறைத்து, மனதில் களைப்பை ஏற்படுத்தியது. நெஞ்சின் பெரும் சுமையாக ராசாத்தியாக்காவின் நினைவுகள் வந்து அடைத்து நிற்க, அவளது அலறலையும் அந்த வேண்டுதலையும் அவர் கணவர் உட்பட யாருமே செவிசாய்ப்பதாக இல்லையே எனத் தவித்தேன் நான். உன் குடும்பம், உன் வாழ்க்கை.என்பதுபோல நடுச்சாமம் அமைதியை அரிதாரமாகப் பூசிக் கொண்டிருந்தது. என் அம்மாவின் வயதுதான் அவருக்கும். ஆனாலும் அம்மா அப்பாவின் அந்நியோன்யமான வாழ்க்கைப் போல அவருக்கு வாய்க்கவில்லை. இதில் யார் பிழையிருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பெற்ற பெற்றோரா? அல்லது அவர்கள் தடுத்தும் தான் காதலித்தவனையே மணமுடிப்பேன் எனும் பிடிவாதத்தோடு வாழ்க்கையின் சந்தோசச் சுவடுகளையே கொடுக்க முடியாத அம்மனிதனைத் தேர்ந்தெடுத்த ராசாத்தியக்காவின் பிழையா? யாரை யார் சாடுவது? வாழ்க்கையில் முதுமை எனும் தளத்தின் முதல் படியைத் தொட்டு நிற்கும் அவளுக்கு விழும் அடிகளைத் தாங்கும்சக்தியை எது கொடுத்துக்கொண்டிருக்கிறதென்னும் கேள்வி என்னுள் எழாமலில்லை.

"நித்தி எழும்பு… நேரம் எத்தினை மணி தெரியுமா? இதென்ன பொம்பிளைப்பிள்ளை விடிய விடிய நித்திரை கொள்ளுற பழக்கம்? நாளைக்குப் போற இடத்திலையும் இப்பிடிச் செய்தாயெண்டால் எங்களத்தான குறை சொல்லுவினம்" அம்மாவின் குரல் கதவடியில் கேட்டது.

"ஓம்… ஓம்…" பொம்பிளைப்பிள்ளையெண்டால் என்ன செய்தாலும் பிழைதான். அம்மாக்குக் கேட்காதவாறு வாயுக்குள் முணுமுணுத்தபடி எழுந்து வாசலுக்கு வந்தேன்.

முற்றம் கூட்டிக் கொண்டிருந்த தங்கை, "என்ன இரவு முழுக்க நித்திரையில்லப் போல, ஒரே கனவுதான்?" எனக் கேலி செய்தாள்.

'ஈஈஈஈஈஈஈ' என அவளுக்கு அழகு காட்டிவிட்டு, கிணற்றடி நோக்கிச் சென்றேன்.

"பிள்ள….. போயிலை (புகையிலை) ஒரு துண்டு இருந்தாத் தாடி… உந்த மணியத்தின்ர கடையில வாங்கினது ஒரே கச்சலாக் கிடக்கடி" தங்கையிடம் புகையிலை கேட்டுக் கொண்டே ராசாத்தியக்கா படலை திறந்து உள்ளே வந்து கொண்டிருந்தாள்.

கண்டவுடனே எனக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. நேற்று இரவு கேட்ட அலறல் சத்தம் கனவா எனும் எண்ணம் ஒரு கணம் வந்தென்னைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்கியது.

"ஆ... நித்தி எப்பிடி நேற்று வந்தவையாம். மாப்பிளையின்ர படம் பாத்தனியோ? எப்பிடிப் பிடிச்சிருக்கோ? கொம்மா வரச் சொன்னவள், எனக்குத்தான் நேரம் கிடைக்கேல்ல. எதுக்கும் பின்னேரம் வாறன் என...." நாடியில் கைவைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள் ராசாத்தியக்கா.

அவளது கேள்விக்குப் பதில் சொல்லும் மனநிலையில் நான் இல்லையென்பதை அவள் எப்படி அறிவாள்... என் அமைதியைப் பார்த்து, "ஓ வெக்கம் போல. சரி சரி நேரம் போட்டுது பேசப் போறாகள்" என்றபடி திரும்பினாள் அவள். கண்ணுக்கடியில் கண்டி காயம் வீங்கிப் போயிருந்தது.

"இண்டைக்கு அருவி வெட்டு, அதுவும் பெருத்த வெட்டு. நேரத்துக் குப் போக வேணும்.... இல்லையெண்டால் வயல்காரனோட ஆடேலாது...." என்றபடி படலை திறந்து போகும் அவளை, ஆச்சரியத்துடன் பார்க் கிறேன்.

இரவு கேட்ட அலறல் சத்தத்திற்கும் தனக்கும் சம்மந்தமே இல்லா தது போல் அருவி வெட்டப் போகும் பெண்கள் குழுவுக்குத் தலைமை தாங்கி வழிநடத்திப் போகிறாள் அவள்.

வாழ்க்கையில் சாதித்த பெண்களென பலரை இந்த உலகம் அறிமுகப்ப டுத்தியிருக்கலாம், பல நூல்களில் அவர்கள் சார்ந்த தகவல்களைப் பகிர்ந்திருக்கலாம் ஆனாலும் கிராமப்புறங்களிலே வாழும் ராசாத்தியக்கா போன்றவர்கள் வெளித் தெரியாமலே வாழ்க்கையை வென்று வாழ்ந்து கொண்டுதானிருக்கிறார்கள்.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# மரணத்தின் வாழ்வு

சிவந்த வானத்தில் வெள்ளைப் பஞ்சை குவியலாக ஒட்டி வைத்ததைப் போலான மேகக்கூடத்திடை தன் இருப்பிடத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தான் பகலவன், மதியவளுக்கு வழிவிட்டு. உழைத்துக் களைத்தவர்கள் தம் இருப்பிடம் ஏக, பச்சைப் புல்லின் சுவையில் தம்மை மறந்து மேய்ந்து கொண்டிருந்த ஆவினங்கள் மேய்ச்சல் நிலங்களை விட்டு அசைய மனமற்றிருந்தாலும், மேய்ப்போனின் பிரம்படிக்குப் பயந்து கூட்டம்கூட்டமாய் வெளியேறிக் கொண்டிருந்தன. வனப்புலம் கிராமம் ஆரவாரங்களைத் தன்னுள் அடக்கியபடி அந்தகாரத்தின் தொடக்கப் பொழுதை வரவேற்கக் காத்திருந்தது.



"வனப்புலம், வேம்படி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

அசோகரத்தினம் என்பவர் 14.03.2023 அன்று காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான கணபதி - அன்னப் பிள்ளையின் அன்பு மகளும், அசோகரத் தினத்தின் அன்பு மனைவியுமாவார். வனப்புலம் வேம்படி வீதியிலுள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு....." இப்படியே தொடர்ந்த அந்த மரணறிவித்தலுக்குக் காது கொடுத்துக் கொண்டிருந்த நான் அம்மாவின் அதிர்ச்சிக் குரலில் திடுக்கிட்டேன்.

"ஐயோ வள்ளியக்கா செத்திட் டாவோ? கடவுளே பாவம் மனிசி எவ்வளவு கஸ்டத்தை அனுபவிச்சது... போதாக்குறைக்கு நோயையும் குடுத்து கடவுளும் மனிசியைச் சோதிச்சிட்டான். வாழாத வாழ்க்கையும் நோயுமாக சாவில கூட அதுக்கு நிம்மதி கிடைக்கேல்ல..."

வள்ளியக்காவின் வாழ்க்கையறிந்தவர்கள், மரணத்தின் பின்பாவது அவளுக்கு நிம்மதியான சுவர்க்கம் கிடைக்க வேண்டுமென்றே எல்லோரும் எண்ணினர்.

**************

"ஐயோ.... ஐயோ ஆராவது ஓடியாங்கோ.... சுப்பு வீட்டுக் கிணத்துக்க விழுந்திட்டினம்" பூஞ்சிக் கிழவியின் ஓலம் முழுக் கிராமத்தையும் பயத்திலாழ்த்தியது.

"ஆராம் விழுந்தது..... என்ன பிரச்சினையாம்.... ஏனாம் விழுந்தது?"

கேள்விகளை அடுக்கியபடி ஒரு கூட்டம் கிழவிக்குப் பின்னால் ஓட, கிணற்றில் விழுந்தவரைக் காப்பாற்றவென இளைஞர்கள் சிலரும் சைக்கிளில் விரைந்தனர் சுப்பு வீட்டுக் கிணற்றை நோக்கி.

தற்கொலைக்குப் பெயர் போன சுப்புவீட்டுக் கிணற்றின் ஆழம் அதில் வீழ்ந்து உயிர் தப்பியவர்கள் அறிவர். விடாமுயற்சியினால் மட்டுமே அந்தக் கிணற்றுள் விழுந்தவர்கள் மீண்டிருப்பதை ஊர் அறியும்.

என்னால் இயல்பாய் இருக்கமுடியவில்லை. "ஆர் விழுந்தது எண்டு இப்ப போய் அம்மாட்ட கேட்டால், நல்ல பேச்சுக் கிடைக்கும். படிக்கிறத பார்க்காமல் உனக்கென்ன வேண்டிக் கிடக்கெண்டு நிச்சயம் பேச்சு விழும். 'ஆரெண்டாலும் உயிர்தானே... ஏனிப்படி?' வனபுலத்தைக் காக்கும் ரோட்டுக்கரை முருகையனை மனதால் வேண்டுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிலிருந்து வந்த தம்பி அப்போதுதான் கைகால் முகம் கழுவிப் படிக்கும் மேசைக்கருகில் வந்தமர்ந்தான். மனம் பாடப் புத்தகத்தில் பதியவில்லை எனக்கு. ஒரு நிலையில்லாது தவித்துக் கொண்டிருந்த என்னை அடக்கமாட்டாது மெதுவாகத் தம்பியிடம் பேச்சுக் கொடுத்தேன்.

"ஆரடா தம்பி கிணத்துக்க விழுந்தது?"

"உனக்கேன் அது?" என்றபடி திரும்பி அம்மா எங்கேயெனப் பார்த்தவன், "அது வந்தடி அக்கா உனக்குத் தெரியுமா நாங்கள் பள்ளிக்கூடத்துப் போற பாதையில அந்தப் பெரிய மாமரம் நிக்குது ஒரு வீடு, நாங்கள் கூடப் போய் மாங்காய் ஆய்வோமே... அந்த வீட்டு அன்ரிதான் விழுந்தவா... காப்பாத்தியிட்டினம். பாவமடி அக்கா அந்த அன்ரி.... ஆக்கள் போய் காப்பாத்தி வெளியில தூக்கினாப் பிறகு தன்னையேன் காப்பாத்தினீங்கள் எண்டு கேட்டுக் கேட்டு அழுதவாடி.... பாக்கப் பாவமாக் கிடந்தது"

தம்பி சொன்னபோது, சுரீரென்றொரு வலி மனதில் தைத்தது. யாரோடும் பெரிய பேச்சுவார்த்தைகளில்லை. தானுண்டு தன் பாடுண்டு என்றே இருப்பா, நாங்கள் பள்ளிக்கூடம் செல்லும் நேரம் சில வேளை தன் வீட்டுப் படலையடி கூட்டிக் கொண்டு நிற்பதைக் கண்டிருக்கிறன். எங்களைக் கண்டால் விளக்குமாறை ஓரமாக வைத்துவிட்டுப் பார்த்துச் சிரிப்பா.... ஆனாலும் எங்களோட கதைச்சதில்லை.

"என்ன ரண்டு பேரும் குசுகுசுக்கிறியள்.... என்ன பிரச்சினை?" என்றபடி வந்த அப்பா கதிரையில் அமர, தேநீரோடு வந்த அம்மா,

"அப்பா உங்களுக்கொண்டு தெரியுமே வள்ளியக்கா கிணத்துக்குள்ள குதிச்சிட்டாவாம்...."

அப்பாவோ பெருமூச்சை விட்டபடி அம்மாவைப் பார்த்தார். அம்மாவின் முகத்திலும் கவலைதான் தென்பட்டது.

"பாவம் என்னப்பா வள்ளியக்கா.... மாமியார் தான் சாகிறதுக்குள்ள தன்ர ஒரே மகனை தமையன்ர மகளுக்கு கட்டி வைக்க வேணுமெண்டு ஒற்றை கால்ல நிண்டெல்லோ கட்டி வைச்சவை. அப்பிடிக் கட்டி வைக்கேக்க தன்ர மோனுக்கு விருப்பமிருக்கோ இல்லையோவெண்டு ஒரு வார்த்தை கேட்டிருந்தால் இண்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மனிசியேன் இப்பிடிக் கிணத்துக்க குதிக்க போகுது? என்னதான் விருப்பமில்லையெண்டாலும் தான் கழுத்த நீட்டின குற்றத்துக்கு அந்தாளோட வாழலாம் எண்டுதான் நினைச்சிருக்கும் மனுசி. உந்த மனுசன் ஏன் உப்பிடிச் செய்ததோ தெரியாது. பிடிக்கேல்லையெண்டா கட்டாயப்படுத்தின தன்ர தாயின்ர காலில விழுந்தேனும் கலியாணம் கட்டாமலே அந்தாள் விட்டிருக்கலாம். இப்ப தான் தனக்கு பிடிச்ச பொம்பிளையோட வாழப் போயிட்டார் அவர், பாவம் வாழவேண்டிய வயசிலை வாழ்வைத் துலைச்சு நிக்கிறா வள்ளியக்கா" என்ற அம்மாவின் குரலில் ஆதங்கம் வெளிப்படையாகவே தெறித்தது.

"விடு அதுக்கு ஆர் என்ன செய்யிறது? எல்லாம் தலைவிதி... அதுக்காகத் தற்கொலைதான் தீர்வென்று முடிவெடுத்ததுதான் தவறு. சரி இப்ப காப்பாத்தியாச்சுத்தானே... இனி அவா இப்பிடியான ஒரு முடிவு எடுக்காமல் இருக்க அவான்ர சகோதரங்கள்தான் கவனிச்சுக் கொள்ளவேணும்." அப்பாவின் பேச்சு அன்றைய நிலவரத்தை விஸ்தீரணப்படுத்த விரும்பவில்லையென்றே எனக்குத் தோன்றியது.

*************

காலங்கள் நகர்ந்தது... கூடவே காட்சிகளும்தான்....

வாழலாமென முடிவெடுத்து வாழ்பவரைத்தான் இறைவனும் சோதிப்பான் போல.

வள்ளியக்காவின் வாழ்க்கையில் நோயென்ற புயலும் சேர்ந்து கொள்ள இதோ அவள் விரும்பித் தேடிய மரணம், பல சோதனைகளின் பின் பல காலமாற்றங்களோடு இன்றுதான் கிடைத்திருக்கிறது. நோயின் தாக்கத்தில் உப்பியிருந்த உயிரற்ற உடலுக்குக் கூறைப்பட்டுடுத்தி.... நெற்றியில் செந்திலகமிட்டு.... தாலியோடு மாலைகள் கழுத்தை நிறைக்க பெட்டியினுள் கிடத்தப்பட்ட அவளின் தேகத்தில் இதுவரை அவளால் தேடப்படாத குங்குமமும்.... கூறையும்.... தாலியும் தேவையற்ற கனமாகவேயிருந்திருக்கும், பூர்த்தியற்ற வாழ்க்கைப் பயணத்தைப் போல். மரண வீட்டில் குழுமியிருந்த ஒவ்வொருவருக்கும் வள்ளியக்காவின் வாழ்க்கை கதையாகிப் போனது.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. நளாயினி

# பெண்ணியவாதி

திருமண பேச்சு வார்த்தை முடிந்து முதன் முதலாக அவனும் அவளும் பேசுவதற்கு வீட்டினரால் அனுமதி கொடுக்கப்பட்ட பின்னர் அவன்தான் முதலில் தொலைபேசி அழைப் பெடுத்தான்.

"ஹலோ, நான் அரவிந்தன்"

"ம் சொல்லுங்கோ" பெண்மையின் வெட்கத்தை குரலினூடே வெளிப்படுத்தியவாறு அவளும் தொடர்ந்தாள்.

இப்படியே இருவருக்குமான பேச்சுக்கள் தொடர்ந்தது. தனக்கு என்ன பிடிக்கும் பிடிக் காதென்பதைப் பற்றி அவனும் அவளுக்கு என்ன பிடிக்கும் பிடிக்காதென்பதைப் பற்றி அவளுமா கப் பேசி தமக்கான ஒரு புரிந்துணர்வுக்கு வந்த பொழுது திடீரென ஒருநாள் அரவிந்தன் தான் சொன்னான்

"இதைப் பார் நிவி நீ முகநூல்ல போடுற பதிவுகள் ஏதோ பெண்ணியவாதியளப் போல இருக்கு. எனக்கு இப்பிடி பெண்ணியம் பேசிற பொம்பிளையளப் பிடிக்காது பார். அதனால நீ இப்பிடி எழுதிறத நிப்பாட்டு. அதோட நீ முகநூல்ல போடுற பதிவுக்கெல்லாம் யாரோ வேற்று ஆம்பிளையள் வந்து கொமன்ட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடுறதும், அதுக்கு நீ விளக்கம் குடுக்கிறதும் எனக்கு சுத்தமாப் பிடிக்கேல்ல."

அவளிடம் எந்த ஒரு முடிவும் கேட்காது அவனாகவே ஒரு வாதத்தை முன் வைத்து அதற்கு முடிவும் கொடுத்துவிட்டான்.

நிவியால் இதைச் சட்டென்று அனுமானிக்க முடியாத ஒரு திணறல் நிலை. பொதுவாக இரண்டு ஆண் சகோதரர்களுடன் பிறந்து வளர்ந்தவள். தந்தை ஓர் விவசாயி. அவள் சகோதரர்களும் சரி தந்தையும் சரி ஒரு போதும் அவளைப் பெண்ணென்று பிரித்துப் பார்த்து, பெண் இப்படித்தானென்ற வரைமுறையை அவளிடம் எதிர்பார்த்ததில்லை. அதற்காக அவளும் வரம்பு மீறியதுமில்லை. பொதுவாக அவளுக்குக் கொஞ்சம் எழுத்துத்துறையில் நாட்டமென்பதால் அந்தத்துறையில் பிரகாசிக்க தங்களால் இயன்றதை அவர்கள் அவளுக்கு வழங்கியே வந்திருக்கிறார்கள். அதற்கான சுதந்திரத்தையும் கொடுத்தார்கள்.

அவளின் எழுத்தில் பெண்களின் நுண்ணிய வலிகளையே அவள் பிரதிபலிப்பதாக அவளின் தந்தையே சில தருணங்களில் சொல்லியிருக்கிறார்.

ஒருபோதும் அவள் ஆணுக்குப் பெண் சமமென வாதிடுவதில் விருப்பமற்றவளென அவளது எழுத்துக்கள் பறைசாற்றியே நிற்கும். அப்படியிருக்க அரவிந்தனின் இந்தக் குற்றச்சாட்டை அவள் மனம் ஏற்க ஒப்பவில்லை.

தன் நிலைப்பாட்டையும் எழுத்தின் மீது அவளுக்கிருக்கும் ஆர்வத்தையும் விளக்கி அவனுக்கு குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பினாள்.

அவனிடமிருந்து வந்த பதில் அவளை அதிர்ச்சியின் எல்லையில் நிறுத்தியது.

"எனக்குப் பிடிக்கேல்ல எண்டு சொன்னால் அதை நிறுத்த வேண்டியதுதான? பிறகென்ன விளக்கம் சொல்லுற" இப்படித்தான் அவனிடமிருந்து பதில் வந்தது.

குடும்பம், உறவுகளென அனைவரும்தான் அரவிந்தன் நிவி திருமணத்தை முடிவு செய்தவர்கள். முகநூலில் எழுத வேண்டாம் என்பதை வைத்து அவளால் திருமணத்தை எளிதில் நிறுத்த முடியாதென்பதையும் அவள் அறிவாள். அதனால் கொஞ்சம் பொறுமையோடு யோசித்து முடிவை எடுத்தாள் அவள்.

திருமணம் இனிதே நிறைவேறி, அன்று அவர்களுக்கான முதல்நாள் இரவு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கிய வெளிச்சத்தை அறை முழுதும் பரப்பிய அந்த மின்குமிழ் ஒளியில் அரவிந்தனை திரும்பிப் பார்த்தாள் நிவி, கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமித்து அவளை முழுவதுமாய் தனக்குள் பிணைத்துக் கொண்ட, திருப்தி முகத்தில் படர ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான் அவன்.

மெல்லிய வலி அவள் உடலெங்கும் பரவி மனதை அழுத்தத் தொடங்க, விழி நீர் வழிந்து அவன் கொடுத்த முத்தத்தின் அனலை அணைத்துக் கொண்டிருக்கிறது அவள் கன்னத்தில்.

**"பரிசுத்தத்தின் ஆத்மார்த்தம் நிறை நேசத்திற்கெனவே**

**உனைக் காதல் செய்கிறேன்.**

**நூலிழை நெய்த ஆடை கவ்விய**

**தேகத்தின்பால் வழியும்**

**காமத்திற்காகவல்ல."**

உறங்கிக் கொண்டிருந்த அரவிந்தனின் அருகாமையில் சென்று அவன் முகத்தை பார்த்தபடி நின்றாள் நிவி.

அரவிந்தனின் நற்குணங்களை அவள் மனப்பூர்வமாக அறிவாள். அதனால்தான் அவளுக்குப் பிடித்த எழுத்துத்துறையை அவன் கைவிடு என்றபோதும் அவனோடான திருமணத்திற்கு அவள் சம்மதம் தெரிவித்ததே.

அவன் வளர்ந்த சூழல் அவன் சிந்தனையை ஆக்கிரமித்திருப்பது நிதர்சனம். ஒரு குழந்தை தான் வளருமிடத்தின் சூழலுக்கேற்பவே தன் இயல்பை நிலைநிறுத்த முயலும். அதைப் பெற்றவர்களே உணர்ந்து அதிலிருந்து பிள்ளையின் நிலையை மாற்றியமைக்க வேண்டும்.

தந்தையற்ற அவனது வாழ்வில் தாயும் சகோதரியுமே பிரதானமானவர்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் தன் சங்கடத்தைக் கஸ்டத்தை அவன் தாய் அவனோடு பகிர்ந்ததில்லை. சகோதரியும் அப்படியே. அவன் ஆண்பிள்ளை அவனுக்கு பெண்கள் தம் சங்கடங்கள் எதுவும் தெரிந்துவிடக் கூடாதென்பதில் மிகக் கவனமாகவே இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனநிலையே, சொல்லப்படாத பெண்ணின் வலிகளை நிவி எழுத்தில் கொண்டு வருவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதற்கான ஏனைய ஆண்களின் கருத்தோடு அவனால் ஒப்புவமையாக முடியவில்லை.

அரவிந்தனின் மனதை மாற்ற இயலும். தன் நிலையை உணர்த்த முடியும். ஆனால் அதற்கு கொஞ்சம் அவகாசம் தேவையாயிருந்தது அவளுக்கு. அதுவோர் கரடு முரடான சவால் நிறைந்த பாதை, கடந்துவிட்டால் பூக்களும் கனிகளும் நிறைந்தவோர் சோலை என அவள் எண்ணிக் கொண்டாள்.

கண்விழித்த அரவிந்தனின் எதிரில் யோசனையோடிருந்த நிவி எதிர்ப்பட்டாள்.

"என்னடா நிவி யோசிக்கிறாய்? வீட்டு நினைவோ? முகம் சோர்ந்து போயிருக்கு? இரவு நான்...."

அவன் பேசப் பேச அவளது உள்ள இறுக்கம் தகர்ந்து நொருங்கத் தொடங்கியது.. அவன் கரங்களைப் பற்றிய அவள்,

"இல்லப்பா... கொஞ்சம் புது இடம்... புது ஆக்கள். ஆனால் போகப் போக எல்லாம் சரிவரும். என்னைச் சரிப்படுத்திக் கொள்ளுறன்."

அவளது உள்ளங்கையில் சிறு அழுத்தத்தைக் கொடுத்துவிட்டுச் செல்லும் அரவிந்தனை சிறு புன்னகையோடு பார்த்து, 'உங்களுக்கு பெண்மையை, அதில் செறிந்து குவிந்துள்ள வலியை நான் உணர வைப்பேன்' எனத் தனக்குள் முணுமுணுத்தவாறே அறையை விட்டு வெளிவந்தாள் நிவி. நாட்கள் நகரத் தொடங்கியது. இந்த நாட்கள் யாருக்கு என்ன நடந்தால் எனக்கென்ன, என்னோடு இயைந்து வரமுடிந்தால் என்னைத் தொடருங்கள் என்பது போல, அதுபாட்டுக்கு ஓடிக் கொண்டிருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஓய்வுநாள்.

"அரவிந்தன், தங்கச்சிய பொம்பிளை பாத்திட்டுப் போனவை ஏதும் சொன்னவையோடா?" அரவிந்தனின் அம்மா.

"என்னத்தையம்மா சொல்லுவினம் எல்லாம் வழக்கம்போலதான். தங்கச்சி நிறமில்லையாமெண்டு மாப்பிளையின்ர அம்மாவுக்கும் அக்காவுக்கும் பிடிக்கேல்லையாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்படியில் நிவிக்கு உதவி செய்தபடி நின்ற ஆரணியின் விசும்பல் அவளுக்குத் தெளிவாகவே கேட்டது.

"ஆரணி என்ன இது, எதுக்குப் இப்ப அழுகிறாய்?"

"பின்ன என்னண்ணி... எத்தினை நாள் எத்தினை பேர் பொம்பிளை பாக் கிறதுக்கெண்டு வருவினம்... பிறகு அது பிடிக்கேல்ல... இது பிடிக்கேல்ல யெண்டுறது... எனக்கும் உணர்வொன்று இருக்குத்தானே. மாப்பிளை சொன்னாலாவது பரவாயில்லை. மாப்பிளையின்ர அம்மா அக்கா தங்கச்சியெண்டு அவை என்னில குறை கண்டு பிடிக்கினம். போதாக்குறைக்கு எனக்கு செவ்வாய் தோசமாம். பொம்பிளையாப் பிறக்கிறதே சாபமோ அண்ணி? அவையும் பொம்பிளையள் தான" அடக்கிய வலியத்தனையையும் கொட்டிவிட்டாள் ஆரணி.

"வாங்கோ... சாப்பிட" கூப்பிட வந்த நிவியை இழுத்தணைத்த அரவிந்தன், அவள் தோளில் முகம் புதைத்தான்.

"என்ன இது குழந்தையப் போல...? ஆதரவோடு முதுகை நீவிவிட்டவள், அவன் முகத்தை நிமிர்த்தினாள்.

"ஆரணி எவ்வளவு பெரிய வலிய சுமந்து கொண்டிருக்கிறாள். இதுநாள்வரை அவளோ அம்மாவோ இப்பிடிக் கலங்கி நான் பார்த்ததேயில்ல தெரியுமா? மனசு வலிக்குது நிவி." உடைந்து போன அவன் குரல் மனசுக்குள் ஊடுருவி பரவுவதை நிவியால் உணர முடிந்தது.

"விடுங்கோ... எல்லாம் சரியாகும்... சீக்கிரமே ஆரணிக்கொரு நல்ல வாழ்க்கை அமையும். பொம்பிளையளின்ர வலிகளை ஆண்கள் மட்டுமில்ல சக பெண்களும் உணர வேணும். ஒரு பொம்பிளையின்ர வலிகள எழுத்திலையோ பேச்சிலையோ வெளிக் கொண்டு வாறதுக்குப் பேர் பெண்ணியவாதமில்லை. நீங்கள் நான் உணராத அல்லாட்டி உணர முடியாதபடி மறைக்கப்பட்ட மிக நுட்பமான வலிகளே அது. அதை எல்லாரும் புரிஞ்சு கொள்ளோணும்." என்றபடி எழுந்தாள் நிவேதா அரவிந்தன். இப்போது அவள் அறிவாள், தன் எழுத்துக்கான தடைகளைத் தகர்ப்பதற்கான முதல் அத்திவாரத்தை தான் இட்டிருக்கிறாளென்பதை.

• • • •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LUXMI EDUCATION CENTRE

# LEC

## ENROLLING NOW
2022 / 2023



**REGISTER NOW**

www.leconline.co.uk

0208 573 0368

07852 810 285

## WHAT WE OFFER

**01.**
KS1 & KS2
Maths
English
Science

**02.**
KS3 & KS4
Maths, Physics
Chemistry,
Biology
Maths

**03.**
KS5
Puremaths
Mechanics
Statistics
Physics
Chemistry

Luxmi Education Centre, 101A Blyth Road, Hayes, UB3 1DB.
Web: www.leconline.co.uk Tel: 0208 573 0368

LEC Digital Designs

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அற்புதமான அழகுமிகு
வடிவங்களில் குறைந்த
விலையில்
நிறைந்த சேவையினைத் தருவது
வெஸ்டேர்ண் ஜுவல்லர்ஸ்.

# WESTERN
JEWELLERS

Wembley Branch:
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, HA0 4YA

**SPECIALISED IN 22ct GOLD, WHITE GOLD, PLATINUM & DIAMOND JEWELLERY**

Tooting Branch:
230 Upper Tooting Road
London, SW17 7EW

## SILK EMPORIUM

122 Upper Tooting Road
London, SW17 7EN

FIRST JEWELLERY SHOP IN UK

WWW.WESTERNJEWELLERS.COM
TEL : 020 8903 0909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org